பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ்நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார்வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127]

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 11 திங்கட்கிழமை (27 08-2001) தொலைபேசி: 3378 ஒலி: 259

## யுத்தவிமானங்கள்; கனரக ஆயுதங்கள் சகிதம்

# முகமாலை ஊடாக படையினர் நேற்று மும்முனைத் தாக்குதல்!

### புலிகள் பதிலடி; முன்னேற்றம் முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

**தமிழீழவிடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள தென்மராட்சிப் பகுதியை மீண்டும்கைப்பற்றும் நோக்குடன் இராணுவத்தினர் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு மும்முனை வழியாக பாரிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர்.**

**இந்நடவடிக்கையை தாம் வெற்றிகரமாக முறியடித்துள்ளதாகவும் இதனையடுத்து இராணுவத்தினர் மீண்டும் தமது பழையநிலைகளுக்குத் திரும்பியுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.**

யாழ்.கண்டி வீதியின் ஏ 9 பாதையின் மேற்குப்புறமாகவும் கிழக்குப்புறமாகவும் மூன்று முனைகள் ஊடாக முகமாலையில் இருந்து இந்த இராணுவநடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இந்நடவடிக்கையின் போது ஒரு அதிகாரி உட்பட 7 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

யுத்தவிமானங்கள், உலங்கு வானூர்திகள் ஆட்லறிகள் யுத்தடாங்கிகள் பீரங்கிகள் மற்றும் கனரக ஆயுதங்கள் சகிதம் நேற்றுக் காலை 5.30மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவநடவடிக்கையின் போது படையினரின் முன்னேற்றமுயற்சிகள் முறியடிக்கப் பட்டதனால் இழப்புக்களுடன் படையினர் மீண்டும் தங்களது பழைய நிலைகளுக்கு திரும்பியுள்ள

→ 8ஆம் பக்கம் பார்க்க

## தென்மராட்சியில் விடுதலைப்புலிகளின் காவலரண்கள் தாக்கியழிப்பு

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

தென்மராட்சிப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னணிக்காவலரண்களைப் படையினர் தாக்கியழித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு நேற்றிரவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது:

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் பெருமெடுப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையின் போது ஓர் அதிகாரி உட்பட 10 இராணுவத்தினர் காயம் அடைந்துள்ளனர் என்றும், விடுதலைப்புலிகள் தரப்பில் 6 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளதுடன். இதுஒரு மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை என்றும் அறிவித்துள்ளது;

இதேவேளை இம் மோதலில் காயமடைந்த படையினர் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## அரசவைத்தியர்கள் நாளை ஒருநாள் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

அரச வைத்தியர்கள் நாடு தழுவிய ரீதியில் ஒருநாள் வேலைநிறுத்தப் போராட்டத்தை நாளை செவ்வாய்க்கிழமை நடத்ததிட்டமிட்டுள்ளனர்.

வைத்தியர்களின் ஒய்வூதியம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை வழங்க வேண்டுமென அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுகாதார பிரதி அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சங்கத்தின் கோரிக்கைக்குச் சாதகமான பதில்கிடைக்காத காரணத்தினாலேயே ஒரு

→ 8ஆம் பக்கம் பார்க்க

## கல்குடாத் தொகுதி சுகாதாரத் தொண்டர்கள் இன்று முதல் சாகும்வரை உண்ணாவிரதம்

[மட்டக்தளப்பு)

மட்டக்களப்பு கல்குடாத் தொகுதி சுகாதாரத்தொண்டர்கள் இன்று முதல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

அரசாங்க வைத்தியசாலைகளில் வழங்கப்படும் சிற்றூழியர் நியமனங்களில் முன்னுரிமை அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்தே மேற்படி தொண்டர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

வடக்கு கிழக்கு மாகாண சுகாதர சேவைகள் பிரதிப் பணிப்பாளரின் மட்டக்களப்பு அலுவலகத்தின் முன்

→ 2ஆம் பக்கம் பார்க்க

## ஐ.தே.கட்சியுடன் அரசு பேசுவதற்கு வெளிநாடுகள் அழுத்தம் தரவில்லை

### அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

தென்மராட்சிப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னணிக்காவலரண்களைப் படையினர் தாக்கியழித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு நேற்றிரவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது:

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் பெருமெடுப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையின் போது ஓர் அதிகாரி உட்பட 10 இரா ணுவத்தினர் காயம் அடைந்துள்ளனர் என்றும், விடுதலைப்புலிகள் தரப்பில் 6 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளதுடன். இதுஒரு மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை என்றும் அறிவித்துள்ளது.

இதேவேளை இம் மோதலில் காயமடைந்த படையினர் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

பட்ட இந்த இராணுவநடவடிக்கையின் போது படையினரின் முன்னேற்றமுயற்சிகள் முறியடிக்கப் பட்டதனால் இழப்புக்களுடன் படையினர் மீண்டும் தங்களது பழைய நிலைகளுக்கு திரும்பியுள்ளன

→ 8ஆம் பக்கம் பார்க்க

டார்கள் இன்று முதல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

அரசாங்க வைத்தியசாலைகளில் வழங்கப்படும் சிற்றூழியர் நியமனங்களில் முன்னு

மேற்படி தொண்டர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

வடக்கு கிழக்கு மாகாண சுகாதர சேவைகள் பிரதிப் பணிப்பாளரின் மட்டக்களப்பு அலுவலகத்தின் முன்

→ 2ஆம் பக்கம் பார்க்க

# ஐ.தே.கட்சியுடன் அரசு பேசுவதற்கு வெளிநாடுகள் அழுத்தம் தரவில்லை

### அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியுடனும மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி.) யுடனும் அரசாங்கம் பேச்சுநடத்துதற்கு எந்தவொரு வெளிநாடும் அழுத்தம் கொடுக்கவில்லை என்றும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்தெரிவித்துள்ளார்,

அமைச்சர் கதிர்காமர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்

எதிர்க்கட்சிகளுடன் பேச வேண்டுமென்று வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அரசைக் கேட்குமுன்பே அரசு ஐக்கிய தேசியக்கட்சியிடனும் ஜே. வி. பி. யுடனும் பேச்சுவார்த்தை நடத்திவருகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியுடனும் ஜே: வி. பி யுடனும் நடத்திவரும் பேச்சுவார்த்தையை அரசு சுயாதீனமான முறையிலேயே நடத்திவருகிறது இதேவேளை எமது நாட்டுப்பிரச்சினைகளில் அதிக அக்கறையுடன் ஆர்வம் காட்டிவரும் வெளிநாடுகளுக்கு எமது நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (வ

### கட்டுநாயக்காவிமானதளத்தாக்குதல்

# வீடியோ திரைப்படம் கடத்தப்பட்டது

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம். விமானநிலையம் விடுதலைப்புலிகளால் தாக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட வீடியோ திரைப்படம் வன்னியிலிருந்து கடத்தப்பட்டு ஐரோப்பாவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இத்தகவலை ஆங்கிலவாரப்

→ 8ஆம் பக்கம் பார்க்

# சிம்பாவே - இங்கிலாந்து கிரிக்கற் போட்டியை ஒலிபரப்ப பிபி.சிக்கு தடை

[லண்டன்]

சிம்பாவே அணிககும் இங்கிலாந்து அணிக்குமிடையான ஐந்து ஒரு நாள் சர்வதேச கிரிக்கற் சுற்றுப் போட்டியை பி.பி.சி. வானொலி ஒலிபரப்புவதை சிம்பாவே அரசு தடைசெய்துள்ளது.

இதன் காரணமாக பிரிட்டிஷ் கிரிக்கற் அதிகாரிகள் சிம்பாவேக்கான கிரிக்கற் சுற்றுப்பயணத்தை ரத்துச் செய்துள்ளனர்: இதனை அடுத்து கிரிக்கற் சுற்றுப் பயணத்தை ரத்துச்செய்வது தொடர்பான தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஹபரோன் [illegible] கிரிக்கட் அதிகாரிகளை கேட்டுள்ளார்.

இதேவேளை சிம்பாவே கிரிக்கற் சங்கத்துடனும் வெளிநாட்டமைச்சுடனும் இது தொடர்பாக பேச்சு நடத்தவுள்ளதாக இங்கிலாந்து வேல்ஸ் கிரிக்கற்சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ந-5)

# சமூகவிரோதசெயல்களை தூண்டும் கசிப்புஉற்பத்தியைஉடன்நிறுத்துக

### புலிகளின் குரல் எச்சரிக்கை

(வவுனியா)

யாழ் குடாநாட்டின் தற்போதய சூழ்நிலையில் கசிப்பு உற்பத்தி மற்றும் விபச்சார நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும் இதனால் யாழ் கல்விச்சமூகம் கவலைகொண்டுள்ளதாகவும் புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு தெரிவித்துள்ளது.

யாழ் குடாநாட்டின் பண்பாட்டு கலாசார சீரழிவுகளை திட்டமிட்டு ஊக்குவிக்கும் வகையில் எயிட்ஸ் நோயாளிகளும் உருவாக்கப்பட்டுள்ளனர்.

சமூகவிரோதசெயல்களைத் தூண்டக்கூடிய போதைப் பொருட்பாவனை கசிப்பு உற்பத்தி போன்ற வற்றை கட்டுப்படுத்த வேண்டும் இத்தகைய செயல்களில் ஈடுபட்டு வரும் இளைஞர்கள் தங்களைத்தாங்களே திருத்திக்கொள்ள வேண்டும் என்று நேற்றிரவு புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது. (ம)

### விஸ்வமடுப் பகுதியில் போர் எழுச்சி நிகழ்வு

(வவுனியா)

''வீரமுரசு வார அரங்கு'' எனும் போர் எழுச்சி நிகழ்வு இராணுவக் கட்டுப்பாடற்ற விஸ்வமடுப் பகுதியில் போர்

→ 8ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சைவசமயத்திற்கு மீண்டும் ஓர் பேராபத்து

# இனயுத்தத்தை பயன் படுத்தி மதம் மாற்றுவதில்

# சில கிறிஸ்தவ அமைப்புகள் களத்தில் குதிப்பு

## ஆங்கிலேயர் தந்தவேதனையில் மீண்டும்சைவமக்கள்

### (6)

சைவசமயத்தவர்கள் மதம் மாறுவதை தடுக்க இந்து அமைப்புக்கள் விழிப்படைய வேண்டும். என்ற அடிப்படையில் 06-08-2001 குருஷேத்திரத்தில் 5ம்பகுதியில் எழுதப்பட்ட கருத்திற்கு இந்து சமயம் சார்ந்த பல அமை

## குருஷேத்திரம்

ப்புக்கள்தமது கருத்துக்களை கடிதங்கள் வாயிலாக எழுதி அனுப்பியிருந்தன.

அவற்றில்சில அமைப்புக்கள் சைவசமயத்தைக் காப்பாற்ற வேண்டுமாயின் புரியாத மொழியில் போதிக்கின்ற மந்திரங்களை விடுத்து தமிழால் அர்ச்சனை செய்ய வேண்டுமென்ற கருத்தை முன் வைத்தன.

இன்னோர் சாரார்ஐயா, அந்தணர்களிடமிருந்து கோயில்கள் என்று மீட்கப்படு கின்றனவோ அன்றுதான் சைவ சமயத்தவர்க்கு மீட்சி என்ற கருத்தை முன்வைத்தனர் இந்துசமயபொதுஅமைப்புக்கள் வரைந்த கருத்துக்களையெல்லாம் இப்பகுதியில் பிரசுரித்து சர்ச்சைகளையும் கருத்து முரண்பாடுகளையும் ஏற்படுத்த விரும்பவில்லை.

ஆனால்தமிழால்அர்ச்சனை செய்ய வேண்டு மென்ற கருத்து ஆய்விற் குரியது. பெரும் வாத பிரதிவாதங்களுக்கு ஆளாகியுள்ள விடய

யும் கூட. அவ் வகையில் ஆலயங்களில் செய்யப் படுகின்ற கிரியைகளில் இடம்பெறும் மந்திர உச்சாடனங்கள் பற்றி நோக்குவது சாலவும் பொருத்தமுடையதே.

### மந்திரங்கள் மொழி பெயர்க்கப்படலாமா?

சமஸ்கிருதத்தில் கூறப்படும் மந்திரங்களை தமிழில்மொழி பெயர்த்துக் கூறலாமென்பது எவ்வகையிலும் பொருத்தமுடையதல்ல.

எந்தெந்த மொழிகளில் மந்திர உச்சாடனங்கள் உள்ளனவோ அந்தந்த மொழிகளில் அவற்றை உச்சரிக்கும் போது தான் அதன் மகிமையும் சக்தியும் பிரகாசிக்கும் மந்திரங்களை மொழி பெயர்ப்புச் செய்யும்போது அதன் வலு இழக்கப்பட்டு விடும் உதாரணமாக ஞான சம்பந்தக் குழந்தை பாடிய தோடுடைய செவியன் என்ற தேவாரத்தை ஆங்கிலத்திலோ அல்லது சிங்களத்திலோ மொழி பெயர்த்து பாடினால் மகிமை ஏது?

தோடுடைய செவியன் என்ற பாடலை மனனம்

## விதுரன்

செய்துஅர்ப்பணிக்கும் போது தான் அது ஏற்புடையதாகின்றது இதேபோன்று தான் சமஸ்கிருத மந்திரங்களும். இவற்றை தமிழில் மொழி பெயர்த்துக் கூறும் போது அவற்றின் சக்தி வலுவிழந்து விடும்.

மந்திரங்கள் பெயர்ச்சொல் போன்றவை தமிழர்ஒருவருக்குப் பெயர் 'சந்தோஷம்' அவரது பெயரைஇலண்டனில் எழுதும்போது ஹப்பி (HAPPY]என எழுதமுடியுமா அதேபோன்றுதான் மந்திரங்களும் இதில் எந்த விதமான மொழி பெயர்ப்புக்கும் இடமில்லை.

அவ்வாறாயின் மந்திரங்களை தமிழில் உச்சரிப்பதன் மூலம் சைவ சமயத்தை பாதுகாக்க முடியுமென்ற வாதம் ஏற்புடைய தல்ல.

### மதமாற்றத்தை தடுப்பது எங்ஙனம்?

மதமாற்றம் என்பது ஈழத்தில் மட்டும் இன்று இடம்பெறவில்லை இந்தியாவில் மதமாற்றம் மிக வேகமாக நடந்துகொண்டிருக்கிறது. இதனை உறுதிப்படுத்துவது போன்று அண்மையில் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கூறிய கருத்து அமைந்துள்ளது. அதாவது சமூகசேவையென்ற பேரில் சில கிறிஸ்தவ அமைப்புகள் மதம்மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன என்பதே அக்கருத்தாகும். இதனை பிரதமர் வாஜ்பாய் தெரிவிப்பதற்கு முன்னதாக குருஷேத்திரத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

### மதமாற்றத்தை தடுக்கும் வழிஎன்ன?

மதமாற்றம் இடம்பெறுவதெனக் கூக்குரலிட்டுக் கொள்வதால் எந்தப்பயனும் இல்லை. அதனைத் தடுக்க முற்படுவதேஇன்றையதேவையாகும். அதற்கு அந்தணர் குழாம் உட்பட சகல இந்து அமைப்புகளும் இணைந்து நல்லை ஆதீன முதல்வரின் தலைமையில் மதம் மாறுவதைத் தடுக்கும் அமைப்பை உருவாக்கி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

(முற்றும்)

### பசுக்களுக்கு சரணாலயம

(யாழ்ப்பாணம்)

பசுக்கள் மற்றும் இடபங்களை பாதுகாக்கும் திட்டத்தின் கீழ் வேலணைப்பகுதியில் சரணாலயம்ஒன்றுஅமைக்கும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லை ஆதீனத்தில் கடந்த 25ம் திகதி இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வயது முதிர்ந்த பசுக்களை இச் சரணாலயத்தில் வைத்துப்பராமரிக்க வேண்டும் என்றும் இந்துசமய நிறுவனங்கள் பலவும் இம் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(கு-10-06)

### கொள்ளையர் அகப்பட்டனர்

(கொழும்பு)

பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களென சந்தேகிக்கப்பட்ட இரண்டு மாணவர்கள் உட்பட 5 பேரை பாதுக்க பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் 16 தொடக்கம் 17 வயதுக்கு உட்பட்டவர்களென்றும் 7 வீடுகளை உடைத்து திருடிய 2 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

(ந-5)

சுகாதாரத்--

பாகவே இவ் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இதேவேளை கல்குடாத் தொகுதியில் சுமார் 840 சுகாதாரத் தொண்டர்கள்கடந்த 16 வருடங்களாக ஊதியம் எதுவுமின்றி பணியாற்றிவருகின்றமை இங்கு குறிப்பிடத் தக்கது.

(இ


## வெற்றுப் போத்தல் தேவை

பனம் சாராயம் அடைப்பதற்காக ஒரு போத்தல் கொள்ளளவு உடைய (750 மி. லீ.) வெற்று மெண்டிஸ் போத்தல்கள் தேவை.

கொள்வனவு செய்து தரக்கூடிய விற்பனை முகவர்கள் தொடர்பு கொள்ளவும் விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ப. இரவீந்திரன்
பொது முகாமையாளர்
திக்கம்,வடிசாலை,
அல்வாய்.

(இ/2427)


## அரசு-ஐ. தே. க. பேச்சு முடியும்போது

# ரணில்விக்கிரமசிங்கவே பிரதமர்

### கொழும்புஅரசியல்வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்குமிடையே ஆரம்பமாகிய பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நிறைவடையுமானால் தற்போதைய எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையின்

யுடன் கருத்து வேறுபாடு கொண்டு செயற்பட்டுவந்த சிரேஷ்டஅமைச்சர்களான ஜி. எல். பீரிசும், எஸ். பி. திஸநாயக்காவும் தொடர்ந்து அரசிற்குதமது ஆதரவுவழங்குவதாகதெரிவிக்கும் கடிதங்களைஜனாதிபதியிடம் கையளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் ஆரம்பித்த பேச்சுவார்த்தைகள் தோல்வியுறுமாயின் ஜே. வி. பியுடனான அரசின் உறவுகள் மேலும் வலுவடைய வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(க)


வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம்
யாழ்ப்பாணம்

## அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பு முடிவுகள் (26.08.2001)

நேற்றைய தினம் யாழ். மத்திய கல்லூரியில்

கொள்வனவு செய்து தரக்கூடிய விற்பனை முகவர்கள் தொடர்பு கொள்ளவும் விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ப. இரவீந்திரன்

பொது முகாமையாளர்
திக்கம், வடிசாலை,
அல்வாய்.

(சி/2427)

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம்
யாழ்ப்பாணம்

**அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பு முடிவுகள் (26.08.2001)**

நேற்றைய தினம் யாழ். மத்திய கல்லூரியில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு.

முதலாம் பரிசு
இல. 271. எஸ். சந்தகுமார்
சென்ஜோன்ஸ் கல்லூரி. யாழ்ப்பாணம்

இரண்டாம் பரிசு
இல. 1058 மு. தனலட்சுமி
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்

மூன்றாம் பரிசு
இல. 2353 ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

நான்காம் பரிசு
இல. 1187 குமாரி பலசரக்கு மாளிகை
பருத்தித்துறை

ஐந்தாம் பரிசு
இல. 772 என். எம். கந்தசாமி
கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு

இவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொட்டடியில் உள்ள வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தில் வைத்து வழங்கப்படும்.

'அனைவரின் ஆதரவுக்கும் நன்றி'

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம்

(2428)

# அரசு - ஐ. தே. க. பேச்சு முடியும்போது ரணில்விக்கிரமசிங்கவே பிரதமர்

## கொழும்பு அரசியல்வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்குமிடையே ஆரம்பமாகிய பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நிறைவடையுமானால் தற்போதைய எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் தேசிய அரசாங்கத்தின் பிரதமர் ஆவார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்; தற்போதைய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா உப-ஜனாதிபதி ஆகலாம் என்றும் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை ஜனாதிபதியுடன் கருத்து வேறுபாடு கொண்டு செயற்பட்டுவந்த சிரேஷ்ட அமைச்சர்களான ஜி. எல். பீரிசும், எஸ். பி. திஸநாயக்காவும் தொடர்ந்து அரசிற்குதமது ஆதரவுவழங்குவதாகதெரிவிக்கும் கடிதங்களைஜனாதிபதியிடம் கையளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் ஆரம்பித்த பேச்சுவார்த்தைகள் தோல்வியுறுமாயின் ஜே. வி. பியுடனான அரசின் உறவுகள் மேலும் வலுவடைய வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# துப்பாக்கிப்பிரயோகத்தில் தீவிரவாதிகள் மூவர் பலி

## பூஞ்சி நகரில் சம்பவம்

(பூஞ்சி)

ஜம்மு-காஷ்மீர் பூஞ்சிநகர் பகுதியில் பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தீவிரவாதிகள் மூவர் கொல்லப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற பொலிஸ் நிலைய தாக்குதலிற்கு பதிலடி கொடுக்குமுகமாக பொலிஸார் பூஞ்சி நகர் முழுவதும் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியபோதே இவ் அனர்த்தனம் இடம்பெற்றது.

சுடப்பட்டு இறந்தவர்களில் ஒருவர் லக்சறி தொய்பாய் அமைப்பின் அப்பிரதேசத் தலைவர் அமுர்கபி மற்றையவர் மொகமட் இமாலும் எனத்தெரிய வந்துள்ளது. (து)

# உளவுசொன்ன அமெரிக்கர் நீதிமன்ற விசாரணையில்

(நியூயோர்க்)

வெளிநாடு ஒன்றிற்கோ நிறுவனமொன்றிற்கோ நாட்டின் இரகசியங்களைக் கொடுத்தார்என்றகுற்றத்திற்காக அமெரிக்க விமானப் படை அதிகாரி ஒருவர் நீதிமன்றில்நிறுத்தப்பட்டுள்ளார்.

கடந்த வியாழன் அன்று ஒஸ்கன் விமான நிலையத்தில் தரித்து நின்ற பிறைன் றீகன் என்ற விமானப்படைஅதிகாரி உளவு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டார்.

றீகன் இம்மாதம் தொடக்கம் உளவு வேலையில் ஈடுபட்டுக்கொண்டு வருகிறாரென்றும் ஆனால் எந்த நாட்டிற்கு அல்லது நிறுவனத்திற்கு உளவுபார்த்து வந்தார் என்பது தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

**பிரிவுத் துயர் பகிர்வு**

சாவல் கட்டினை வசிப்பிடமாகக் கொண்ட கார்த்திகேசு சிவனாதி நேற்று முன்தினம் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்றது.

தகவல்
எஸ். கே. வசந்தன்
(பேரன்)

சாவல்கட்டு

# இராசி பலன்

27/8/2001
(ஆவணி 11, திங்கள்)
நவமி மாலை 7.01 வரை
கேட்டை பி.இ 10.37 வரை
ராகுகாலம் 7.35-9.05 வரை
நல்லநேரம் 12.05-1.35
சித்தம்

**மேடம்**
முயற்சி தாமதம், உறவினர் மனக்கசப்பு, பிரயாண பயம், உடல் சோர்வு.

**இடபம்**
பிரயாணம், வரவேற்பு, நல்ல முயற்சி, தனலாபம்.

**மிதுனம்**
சத்துரு ஜெயம், முயற்சி நன்மை, தொழில் நன்மை, அரச உதவி.

**கடகம்**
சுகலாபம், புத்திரரால் கவலை, உடல் சோர்வு முயற்சி தாமதம்.

**சிங்கம்**
தன்னம்பிக்கைக் குறைவு, வியாபார நன்மை, காரிய தாமதம், வியாதி.

**கன்னி**
இனிய சம்பவம், சகோதரர் உதவி, முயற்சி வெற்றி, வாக்கு மேன்மை.

**துலாம்**
வாக்குக் கலகம், மாதர் நட்பு, கௌரவக் குறைவு, காரிய தாமதம்.

**விருச்சிகம்**
ஜனவசியம், காரியம் கைகூடும், கற்பனை மிகுதி, புதிய முயற்சி.

**தனுசு**
பிரயாணம் உணர்ச்சிவசப் படல், தனவிரயம், நிலைக் கேடு.

**மகரம்**
முயற்சி கைகூடும், தொழில் சிந்தை, கௌரவம், குடும்ப சுகம்.

**கும்பம்**
கீர்த்தி, தொழில் மேன்மை, அதிகாரம, காரியம் கைகூடும்.

**மீனம்**
கட்டுப்பாடு, வீண் பயம், அபகீர்த்தி, முயற்சி தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

-வளவன்

## பண்டாரவளைப் படுகொலை போன்று
# களுத்துறைச் சிறையிலும் இடம்பெறலாம்
# தடுப்பதற்கு நடவடிக்கை அவசியம்
### மலையக மக்கள் முன்னணியின் தலைவருக்கு அவசர கடிதம்

(கொழும்பு)
பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் நடைபெற்ற படுகொலைச் சம்பவங்கள் போன்று களுத்துறைச் சிறைச்சாலையிலும் நிகழக் கூடியவாறு மிகமோசமான சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன அதனால் உடனடியாக எங்களைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறுகளுத்துறைச்சிறைச்சாலையிலுள்ள தமிழ்க் கைதிகள் மலையகமக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அக்கடிதத்தில் மேலும்தெவிக்கையில், எமது சிறைச்சாலையின் பொறுப்பதிகாரிகள் எமக்கு எதிராக மிக மோசமான நடவடிக்கைகளைமேற்கொளவதுடன், எம்மைப் பார்வையிட வருகின்ற உறவினர்களை தகாத வார்த்தைகளினால் தூஷிப்பதுடன் பல்வேறு இம்சைகளைப் புரிந்து வருகின்றனர்.

இத்தகைய நடவடிக்கைகள் கொடூரமான படுகொலைகளுக்கு வழி வகுக்கும் என நாம் அஞ்சுகின்றோம்.

இத்தகைய இம்சைகள் குறித்து சிறைச்சாலைப் பொறுப்திகாரிகளிடம் முறையிட்டும் கூட எதுவித பயனுமில்லை.

மாறாக அவர்களது நடவடிக்கை வேலியே பயிரை மேய்வது போல் இருக்கிறது.

இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து மீண்டும் சிறைச்சாலைப் படுகொலைகள் இடம்பெறாமல் தடுப்பதுடன், தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை களுத்துறை மற்றும் பூஸா முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 12 தமிழ் அரசியல் கைதிகள் தமக்கு ஏனைய கைதிகள் போன்று சலுகைகள் வழங்கப்படவேண்டும் என்று கோரி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டமை ஏற்கனவே தெரிந்ததே. (செ)

## நெல்லியடி, கரவெட்டிப் பகுதிகளில்
# சட்டவிரோத மின்சார பாவனையாளர் அதிகரிப்பு

(துன்னாலை)
நெல்லியடி கரவெட்டிப் பகுதிக் கிராமங்களில் சட்டவிரோதமான மின்பாவனையாளர்கள் தொகை அதிகரித்துள்ளதாகப் பொதுமக்கள் புகார் செய்துவருவதாக அறியப்படுகிறது.

நிரந்தர மின்பாவனையாளர்களிலும் பார்க்க சட்டவிரோதமான மின்பாவனையாளர்களே அதிக மின்சாரத்தைப் பாவிப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயத்தை மின்சார சபைக்குத் தெரிவித்தால் நிரந்தர மின்பாவனையாளருக்கும் சட்டவிரோத மின்பாவனையாளருக்குமிடையே முரண்பாடுகள் ஏற்படுவதாகவும் மக்கள்தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (செ-41)

## அரச பதவிகளுக்கு
# விண்ணப்பிக்க முடியாது வடமராட்சி மக்கள் அவதி

(துன்னாலை)
வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவில் கோரப்பட்ட பொது எழுதுநர் சேவை, மற்றும் பண்டசாலைக் காப்பாளர் போன்ற பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியாது வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த பெருமளவினர் பெருஞ்சிரமத்திற்குள்ளானதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பதவிகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு பிரதேச செயலகங்களால் பெறப்பட்ட 200 ரூபா பெறுமதியான பற்றுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதை அடுத்தே மேற்குறிப்பிட்ட சிரம நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் குறித்த பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 28ஆம் திகதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்தினர் தகுந்த நடவடிக்கை எடுத்திருப்பின் மேற்படி சிரம நிலையினைத் தவிர்த்திருக்கலாம் என்று பாதிக்கப்பட்டோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-41)

## கப்பல்கள் புதைகின்ற
# மயானமாக மாறும் காலித் துறைமுகம்

(கொழும்பு)
இந்து சமுத்திரத்தின் பெரிய துறைமுகமாக விளங்கிய காலித்துறைமுகம் இன்று கப்பல்கள் புதைகின்ற மயானமாக மாறியுள்ளது. இங்கு 20 இற்கும் மேற்பட்ட கப்பல்கள புதைந்துள்ளன.

இதனால் இங்கு பாரிய கப்பல் சேவைகளை நடத்த முடியாது கொழும்புத் துறைமுகத்திலேயே இச் சேவைகளை நடத்த வேண்டியுள்ளது.

காலித் துறை முகத்தில்600 இலட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப் பட்ட நங்கூரமிடும்தளத்தை அமைச்சர் ரொனிடிமெல்திறந்து வைத்த போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் பேசுகையில்: தென்னிலங்கையில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொளவதற்கு யுத்தமேதடையாக உள்ளது.

நாட்டில் சமாதானம் தோன்றினால் திட்டமிட்ட அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்த முடியும்.

ஆனால் எமது நாட்டுக்கு கிடைக்கும் வருவாயைவிடவும் யுத்தத்திற்கு செலவு செய்யும் தொகை அதிகரித்துச் செல்வதால் நாட்டில்அபிவிருத்தித் திட்டங்களை அமுல் படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டி உள்ளது என்றும் கூறினார். (க-33)

# மாக்பெட் நிலையத்தில் முன்மண்டபம் இல்லை
### பாவனையாளர்கள் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம் வின்சர் தியேட்டர் சந்தியில் அமைந்துள்ளமாக்பெட்' எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு முன்மண்டப வசதி இல்லாமையால் பெற்றோல் பெறும் வாடிக்கையாளரும் அங்கு கடமைபுரியும் ஊழியர்களும் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

யாழ் குடாவில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் அவற்றுக்கான முன்மண்டபம்இருப்பதினால்கடுங்வெயில் மழை காலங்களில் பொதுமக்கள் நின்று பெற்றோல் பெறுவதை சுட்டிக்காட்டும் வாடிக்கையாளர்கள் மாக்பெட் எரிபொருள் விற்பனைத்திணைக்களம் முன்மண்டபம் அமைத்து வாடிக்கையாளர்களுக்குபாதுகாப்பு ஏற்படுத்துவார்களாவென்று கேள்வி எழுப்பிஉள்ளனர். (ம

## நினைவஞ்சலிக் கூட்டம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின்முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் வீ. தர்மலிங்கம், மு. ஆலால சுந்தரம் ஆகியோர்களது 16வது நினைவஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு இராமநாதன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

## மினிசினிமா கொட்டகைகளில் சுகாதாரப் படக்காட்சி

அனலைதீவு மினிசினிமா அரங்குகளில் படக்காட்சியின் இடையே போஷாக் குணவு தொற்று நோய் சம்பந்தமான படங்கள் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையைச் சேர்ந்த ஏனைய பகுதிகளிலுள்ள மினிசினிமா அரங்குகளிலும் இப் படங்கள் காண்பிக்கப்படவுள்ளன. க75

## அல்லைப்பிட்டி, புளியங்கூடல்;
# மின்சாரம் இல்லையாம் கிராம மக்கள் அதிருப்தி

(ஊர்காவற்றுறை)
அல்லைப்பிட்டி, புளியங்கூடல் ஆகிய கிராமங்களில் மின்சாரம இதுவரையில் விநியோகிக்கப்படாதமை குறித்து அப்பகுதிகளில் வாழும் மக்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

மேற்படி பகுதிகளில் உள்ள பொது அமைப்புக்கள் மின்சாரம பெறுவதுபற்றி கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக முயற்சிகள் மேற்கொண்டும் எதுவித பயனும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி ஒவ்வொரு கிராமத்திலும் 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள வசித்து வருவது குறிப்பிடத்தக்கது. (க-75)

## பருத்தித்துறைப் பகுதியில்
# சுகாதாரமற்ற பொருட்கள் விற்பனை கண்டுபிடிப்பு

(மந்திகை)
பருத்தித்துறைப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் காலாவதியானமற்றும் சுகாதாரக் கேடானபொருட்கள் விற்பனை செய்வதற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்பகுதி விற்பனை நிலையங்களில் சுகாதார சீர்கேடான வகையில் பொருட்கள் பராமரிக்கப்பட்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்தே மேற்கண்ட அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது

இதேவேளை, வல்லிபுரக் கோவில் பகுதியில் சுகாதார கேடான முறையில் இனிப்புப் பண்டங்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது. (க-23)

# போரை முடிவிற்கு கொண்டு வராமல் நாட்டைக் காப்பாற்ற முடியாது
### ஜயவர்த்தனபுர பல்கலை. உப-வேந்தர்

(கொழும்பு)
இலங்கையில் நடைபெறும் உள நாட்டு யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வராமல் வேறு எதனைச் செய்தாலும், இந்த நாட்டைக் காப்பாற்ற முடியாது.

இவ்வாறு இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரும், தற்போதைய ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக உபவேந்தருமான ஜகத் விக்கிரமசிங்க ''லங்காதீப'' பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அக் கட்டுரையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது; லண்டன் காப்புறுதித் துறையைச் சேர்ந்த யுத்த அபாயத்தைக் கணிக்கும் குழு, இன்றுமுழு நாட்டையும யுத்த அபாயம் சூழ்ந்த பிரதேசமாகக் கணித்து அதனை உலகறியச் செய்துள்ளது.

இவ்வறிவித்தல் வெளியான நேரத்திலிருந்து இலங்கைக்கு வரும் சகல கப்பல்களையும் விமானங்களையும் காப்புறுதி செய்கையில் அதிகப்படியான கட்டணம் அறவிடும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது;

இதனால் இலங்கை மோசமான யுத்தங்களை எதிர் நோக்கும் நாடுகளின் வரிசையில் தள்ளப்பட்டுள்ளது.

இந்த அபாயகரமான தருணத்தில் சகல கட்சிகளும் ஒன்றுபட்டு மோசமான பயங்கரவாதத்தை நிறுத்த வேண்டும். அதனை யுத்தத்தின் மூலம் செய்ய முடியாது. அரசியல் தீர்வொன்றின் மூலமே செய்ய முடியும்.

என்று அக்கட்டுரையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ)

### பிரபலபந்து வீச்சாளர்
# முத்தையா முரளிதரன் துடுப்பாட்டத்திலும் சாதனை
## அஸ்கிரிய மைதானத்தில் நிகழ்வு

[கொழும்பு]

பிரபல உலகப்பந்து வீச்சாளரும் இலங்கை கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரமுமான முத்தையா முரளிதரன் பந்து வீச்சில் மட்டுமன்றி துடுப்பாட்டத்திலும் அபார சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

அஸ்கிரியமைதானத்தில் நடைபெற்ற இந்திய-இலங்கையணிகளுக்கிடையிலான 2 ஆவது டெஸ்ட்போட்டியின் மூன்றாவது நாள் பல்லாயிரக்கணக்கான கிரிக்கெட்ரசிகர்கள்முன்னிலையில் முதலாவது அரைசதத்தை நிகழ்த்தி இச்சாதனை நிலைநாட்டப்பட்டது.

இதற்கு முன்னர் 1997 ஆம் ஆண்டு பிறேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்திய அணிக்கெதிரான ஆட்டத்தில் இவர்39ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-4)

### வலி. கிழக்குப் பிரதேச சபையில்
# நன்றி தெரிவிக்கும் பிரேரணை நிறைவேறியது

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாமற்றும்யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே. வி.குகேந்திரன் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை வலி.கிழக்குப் பிரதேசசபை ஏகமனதாக நிறைவேற்றியது.

குறிப்பிட்ட பிரதேச சபை எல்லைக் குட்பட்ட கோவில்கள் பாடசாலைகள் போன்றவற்றை புனரமைப்புச் செய்வதற்கு நிதி வழங்கியமைக்காகவே இவ்வாறு நன்றிதெரிவிக்கும் பிரேரணை நிறைவேற்றப்பட்டதாக மேற்படி சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க)

# தொலைபேசிச் சேவை சீரில்லை மக்கள் கவலை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சியில் இருந்து யாழ் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கான தொலைத்தொடர்புச் சேவை சீர்படாதா எனப்பொது மக்கள் அங்கலாய்ப்பு வெளியிட்டு வருகின்றனர்.

நீண்டகாலமாக நிலவி வரும் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்ய பருத்தித்துறைக்கு அண்மையில் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கப்பட்டும் இது விடயத்தில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை எனவும்,

தொலைபேசி வசதி இருந்தும் அதன் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ள முடியாது இருப்பது குறித்தும் பாதிக்கப்பட்ட மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். [உ-42]

# முதற் தடவையாக சதுரங்கவிளையாட்டுக்குழு தென்னிலங்கை பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து முதல் தடவையாக சதுரங்க விளையாட்டு வீரர்கள்தென்னிலங்கையில்போட்டிகளில் பங்கேற்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

...க்கப்பட்டுள்ளனர்;

இவர்களுடன் 4 போதனாசிரியர்களும் பெற்றோர் சிலரும் சென்றுள்ளனர்.

போக்குவரத்திற்கான சகல ஒழுங்குகளையும அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்...

### அதிகஷ்டப்பிரதேசத்தில்
# கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்
## கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தில்தெரிவிப்பு

[கொழும்பு]

ஆசிரியர் ஒருவர் கட்டாய சேவைக் காலத்தின் பின்பு அதிகஷ்டப்பிரதேசப் பாடசாலை ஒன்றில் சேவை ஆற்றுவதாயின் அந்த ஆசிரியருக்கு ஆண்டு தோறும் அப்பாடசாலையில் கடமையாற்றும் வரை இரண்டு சம்பள உயர்வுகள்வீதமும் அவ்வாறான ஓர் ஆசிரியர்மீண்டும் கஷ்டப்பிரதேசபாடசாலையில் சேவையாற்றுவதாயின் ஈராண்டுக்கொரு முறை வருடாந்தச் சம்பள உயர்வுகள் இரண்டும்உரித்துடையன ஆகும்

கொழும்பில் உள்ள கல்வி அமைச்சினால் சகலமாகாண கல்விப் பணிப்பாளர்கள் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்கள், மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் சுற்று நிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அதி கஷ்டப் பிரதேசப் பாடசாலை ஒன்றில் சேவை செய்யாது கஷ்டப் பிரதேசப் பாடசாலை ஒன்றில் கட்டாய சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஒருவருக்கு அக் கட்டாய சேவையின் பின்பு ஈராண்டுகளுக்கு ஒரு முறை இரு சம்பள அதிகரிப்புகள் உரித்துடையன ஆகும்.

சம்பள உயர்வுகளுக்குரிய முதல் சந்தர்ப்பம், கட்டாய சேவைக் காலத்தின் பின்பு முதலாவது சம்பள உயர்வு சந்தர்ப்பமாக அமைய வேண்டும்.

மேலும் 53வயதினைத் தாண்டிய ஆசிரியர்களை அவர்களின் வேண்டுகோளின் பேரில் அல்லாது இடமாற்றம் செய்தல் கூடாது.

வைத்திய காரணங்களின் அடிப்படையில் எவராவதோர் ஆசிரியரினால் இடமாற்றம் கோரப்படும்சந்தர்ப்பத்தில் தமது ஆரோக்கிய நிலையை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க வைத்திய சபையின் சிபார்சு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு அச் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# யாழ் நகரில் குரங்கின் அட்டகாசம்

[துன்னாலை]

யாழ் நகர், அதனை அண்டிய பகுதிகளில் குரங்கின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

கூட்டத்தைப் பிரிந்து திசைமாறிய குரங்கு ஒன்றே வீடுகளுக்குள் புகுந்து பொருட்களைச் சேதப்படுத்துவதுடன், சமைத்த உணவுகளையும் உண்டு விட்டுச் சென்று விடுவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றது. [செ-41]

# அம்புலன்ஸ்

# தேசிய நல்லிணக்கஅரசில் இணைய மாட்டோம்
## ரெலோ செல்வம் அறிக்கை

[வவுனியா]

தேசிய அரசு ஒன்று அமையுமானால் அதில் தமது கட்சி இணையப்போவதில்லை என ரெலோ அமைப்பின் தலைவரும் வன்னிநாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இருபெரும்பான்மைக்கட்சிகள் இணைந்து தேசிய அரசு அமைப்பது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசை கவிழ்ப்பதற்காகவே எதிர்க் கட்சியுடன் எமது கட்சி உட்பட சிறுபான்மை தமிழ்க்கட்சிகள் இணைந்தன. இந்நன்றிக்கடனை ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் மறந்துவிடயாட்டாது என நம்புகிறேன்.

இதனைவிடுத்து இருகட்சிகளும் பேச்சுவார்த்தை மூலம் இணையுமானால் அது சிறுபான்மை மக்களையும் சிறுபான்மை கட்சிகளையும் ஓரம் கட்டும் செயலாகும். இத்தகைய அரசை தமது கட்சி ஒருபோதும் ஆதரிக்கமாட்டாது.

எனவேஎத்தகையஅரசுஆட்சிக்கு வந்தாலும் இனப்பிரச்சினைக்கு விடுதலைப்புலிகளுடன் பேசி தீர்வு காணவேண்டும் என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு என்று செல்வம் அடைக்கலநாதன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய நல்லிணக்க அரசு அமைப்பது தொடர்பாக அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் செயலாளர்என்.குமரகுருபரன்விடுத்த செய்திக்குறிப்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நிபந்தனை விதித்த ஐக்கிய தேசிய கட்சி இனப்பிரச்சினை தொடர்பாக எந்த நிபந்தனைகளையும் விதிக்கவில்லை இதிலிருந்து ஐக்கிய தேசியகட்சியின் இரட்டை வேடம் நன்றாக தெரிகிறது என்று குறிப்பிட்டுள்ளார். [ந-4]

# திடீர் பணக்காரரான இராணுவஅதிகாரிகள் மீது

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து முதல் தடவையாக சதுரங்க விளையாட்டு வீரர்கள் தென்னிலங்கையில் போட்டிகளில் பங்கேற்பதற்காக அனுப்பி வைக்கபபட்டுள்ளனர்.

பத்து வயதுக்கு உட்பட்ட பிரிவினராகவும் இருபது வயதுக்கு உட்பட்ட பிரிவினராகவும் மொத்தம் 19 விளையாட்டு வீரர்கள் கப்பல்மூலம் தென்பகுதிக்கு அனுப்பிவைக்

இவர்களுடன் 4 போதனாசிரியர்களும் பெற்றோர் சிலரும் சென்றுள்ளனர்.

போக்குவரத்திற்கான சகல ஒழுங்குகளையும அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு மேற்கொண்டுள்ளது. (உ)

வீடுகளுக்குள் புகுந்து பொருட்களைச் சேதப்படுத்துவதுடன், சமைத்த உணவுகளையும் உண்டு விட்டுச் சென்று விடுவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றது. [செ-41]

பேச்சுவார்த்தை மூலம் இணையுமானால் அது சிறு

என்று குறிப்பிட்டுள்ளார். [ந-4]

# திடீர் பணக்காரரான இராணுவ அதிகாரிகள் மீது
## இலஞ்ச ஊழல் விசாரணை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தை சாடாக வைத்து ஆயுத வியாபாரத்தில் திடீர்ப்பணக்காரர்களான சிரேஷ்ட உயர் இராணுவ அதிகாரிகள் தொடர்பாக அரசு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மூலம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

தமிழ் மக்களுக்கெதிரான யுத்தத்திற்குப் பாவிக்கப்படுவதற்கென பாதுகாப்புப் படைகளுக்குத் தேவையான நவீனரக ஆயுதங்கள், யுத்த தளபாடங்கள் உட்பட அத்தியாவசிய பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது 'தரகு' பெறுவதுடன் மற்றும் ஊழல்தொடர்பாகவும் இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இவர்கள் மீது விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசு எச்சரித்துள்ளது.

இதேவேளை ஆயுதக் கொள்வனவு தொடர்பாக இளைப்பாறிய சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# அம்புலன்ஸ் சேவை தொடரும்

[யாழ்ப்பாணம்]

வரலாற்றுப் புகழ் பெற்ற செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டி உருவாக்கப்பட்ட வடமராட்சி, பருத்தித்துறை பிரிவு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரின் சேவை மஹோற்சவ இறுதிநாள்வரை தொடரும் என யாழ். மாவட்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவின் ஆணையாளர் பொ. அருந்தவராசா தெரிவித்துள்ளார். (க-104)

# பாலவிகாஷ் தினம் செப்ரெம்பர் 15 இல்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய சாயி நிலையங்களின் பாலவிகாஷ் பிள்ளைகளை இணைத்து செப்ரெம்பர் 15 இல் பாலவிகாஷ் தினம்கொண்டாட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனையொட்டி பாலவிகாஷ் பிள்ளைகளிடையே சுலோகம், கீதைசுலோகம், அஷ்டோத்திரம, சுப்பிரபாதம்போன்றவற்றில்மனனப் போட்டியும, கட்டுரை, பேச்சு வினாடி வினா, மாலை கட்டல் போட்டிகளும் இடம் பெறவுள்ளன.

போட்டிகள் யாவும் செப்ரெம்பர் முதலாம் திகதி யாழ் பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் இடம் பெறும். (உ-104)

# 64லொறிகளில் வன்னிக்கு உணவு

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களுக்கு கடந்த வாரம் 64 லொறிகளில் உணவு மற்றும் அத்தியாவசியபொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விசேட ஊடக தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து 87 நோயாளர்களும் 37 உதவியாளர்களும் வவுனியா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்ததாகவும், முன்னர் சிகிச்சை பெற்ற 74 நோயாளர்கள் சிகிச்சைமுடித்துக்கொண்டு புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு சென்றதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந-4)

### வடக்கு- கிழக்கில்
# 09 ஆசிரிய நிலையங்கள் மேலும் அமைக்கப்படும்
## உயர்-அதிகாரி தெரிவிப்பு

[கொழும்பு]

வடக்கு- கிழக்குமாகாணத்தில் மேலும் ஒன்பது ஆசிரிய நிலையங்களை அமைப்பதற்கு அரசு அங்கீகாரமளித்துள்ளதாக திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை இம் மாகாணத்தில் 19 ஆசிரியர் நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன.

இந்த நிலையங்களில் ஆசிரியர்களுக்கு கணனிப் பயிற்சி வழங்குவதற்கு இரு கணனி இயந்திரங்கள் செப்ரெம்பர் மாதம்வழங்கப்படும் என்றும்

ஆசிரியர் வாண்மை விருத்தி அபிவிருத்தி செயற்பாட்டுக்கு உதவுவதற்காக மேற்படி நிலையங்களில்உள்ள நூலகங்களுக்கு வழங்குவதற்கு ஒரு தொகுதி புத்தகங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அந்த உயர் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (க-03)

### ஐந்தாம் தர புலமைப் பரிசில் கொடுப்பனவு
# மாணவரின் வருகைக்கு மட்டுமே வழங்கப்படும்
## சுற்று நிருபத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐந்தாம் தர புலமைப் பரிசில கொடுப்பனவினைப் பெறும் மாணவர்களின் வருகை நாட்களுக்கு மட்டுமே கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டசுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் ஒருவரின் 15 நாட்கள் வரையிலான வருகைக்கு நாள் ஒன்றிற்கு 8 ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படும்.

வருடத்தில் ஒரு தடவை மட்டும் கொப்பிகள் வாங்குவதற்கு 40 ரூபா அல்லது பொருத்தமாக இருப்பின் 60 ரூபா வழங்கப்படும்.

புலமைப்பரிசில் பெறும் மாணவரின் பெற்றோரின் வருமானம் வருட ஆரம்பத்தில் கிராம சேவகர் மூலம் பிரதேசசெயலாளரினால் உறுதிப் படுத்தப் பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-03)

## இன்று ஒரு தகவல்

# மருந்தில் கவனம் தேவை

எனக்குத் தெரிந்த ஒருவர் பொட்டுக் கடலை சாப்பிடுகிற மாதிரி மருந்து மாத்திரைகளை சாப்பிடுவார். ஏழெட்டு விதமான மாத்திரைகளை உள்ளங்கையில் எடுத்து அப்படியே வாயில் போட்டு தண்ணீர் விட்டு விழுங்கிவிடுவார். இவ்வளவும் டாக்டரைக் கேட்டு வாங்கினாரா என்றால் அதுவுமில்லை. மருந்து மாத்திரை பேரெல்லாம் மனப்பாடமாக இவருக்குத் தெரியும். கடைக்குப் போய் கடலை, மிட்டாய் வாங்கிவிட்டு வருவது மாதிரி இவர் மருந்து வாங்கிக் கொண்டு வருவார்.

இது நல்ல பழக்கம் என்றா நினைக்கிறீர்கள? விபரத்தோடு சாப்பிடுகிற மருந்து வியாதியைப் போக்குகிறது. விவரமில்லாமல் சாப்பிடுகிற மருந்து வியாதியை உண்டாக்கி விடும். நாம் சாப்பிடுகிற மருந்துகளைப் பற்றி இரண்டு விஷயங்களை முக்கியமாகத் தெரிந்து வைத்துக் கொள்ளவேண்டும். இது மிகவும் அவசியம். முதல்விஷயம் பக்க விளைவு. அதாவது மருந்தினால் ஏற்படக்கூடிய வேண்டாத விளைவுகள. பொதுவாகப் பலருக்கு ஒவ்வொரு மருந்தும் ஏதாவது வேண்டாத விளைவைகொஞ்சமாவதுஉண்டாக்கியேதீரும். வீரியம் குறைந்த மருந்துகளைக்கூடத் தவறான முறையிலேயோ, நீண்ட காலத்துக்கோ, அளவுக்கு மீறி அதிகமாகவோ சாப்பிட்டால் வேண்டாத விளைவுகள் உண்டாகும்.

அது மட்டுமில்லை. ஒரு மருந்து வெவ்வேறு மனிதர்களுக்கு வெவ்வேறு விதமான வேண்டாத விளைவுகளை ஏற்படுத்தும். இது நாம் தெரிந்து வைத்திருகக வேண்டிய ஒரு முக்கியமானவிஷயம். இரண்டாவது என்னவென்றால் டாக்டர்கள் சொல்கிற ஆலோசனையைச் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். நிறையப் பேர் எப்படியென்றால். டாக்டரிடம் போவார்கள். மருந்து சீட்டு எல்லாம் வாங்கிக் கொள்வார்கள். ஆனால் எந்த மருந்தை எந்த அளவில், எப்போது சாப்பிடவேணும் என்றுடாக்டர்சொல்கிறதைச் சரியாகக் காதில் வாங்கிக் கொள்வது இல்லை.

ணிப்பு இல்லாமல் அஸ்பிரின் மருந்துகளைக் கொடுக்கக் கூடாது. பெரியவர்களுக்குக் கூட இது வேண்டாதவிளைவுகளை ஏற்படுத்தக் கூடும். வயிற்றுவலி, வாந்தி, வயிற்றுப் புண்கள் உண்டாகிவிடும். இவற்றைத் தவிர்க்க வேண்டுமென்றால் வெறும் வயிற்றில் அதைச் சாப்பிடக்கூடாது. அதை சாப்பிடுகிறபோது ஒரு பெரிய டம்ளர் தண்ணீரையும் தாராளமாகக் குடித்து விடவேணும். அளவுக்கு மீறி அஸ்பிரின சாப்பிடுகிறவர்கள் காதில் கிர் கிர் என்று ஒரு சத்தம் வரும். மருந்தை நிறுத்தினால் அது நின்றுவிடும்.

இதனால் ஒவ்வாமை கூட வரலாம். தோல், தடிக்கும். தும்மல்... நெஞ்சிலே இறுக்கம் எல்லாம் வரலாம். சாதாரண தலைவலிக்கெல்லாம் ஆறு மணிநேரத்துக்கு ஒரு தடவை 600 மில்லி கிராம் அளவுக்கு அஸ்பிரின் சாப்பிடலாம். இதுமாதிரி தொடர்ந்து 10 நாட்களுக்கு மேல் சாப்பிடக் கூடாது. ஜுரத்துக்கு மூன்று நாள் சாப்பிடலாம், அஸ்பிரின் சாப்பிட்டுமுடித்த பிறகு, வேறுமருந்து சாப்பிட வேண்டியிருந்தால், அல்லது அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியிருந்தால் அஸ்பிரின் சாப்பிட்ட விஷயத்தை டாக்டரிடம் சொல்லிவிடுங்கள்.

பரசிட்டமோல் நாம் சுலபமாக வாங்கிச் சாப்பிடும் மருந்து. சின்னச்சின்னவலிகள் வேதனைகளுக்குநிவாரணம் கொடுக்கும். ஜுரத்தையும் நீக்கும், ஆனால் அஸ்பிரினுக்கு இருக்கிற வீக்கம் தணிக்கிற குணம் இதற்கு இல்லை, இது வயிற்றுப்புண் உண்டாக்காது 6.00 மணிக்கு ஒரு தடவை 500 மில்லிகிராம் அளவு சாப்பிடலாம். இதை விடக் குறைவான அளவே பலருக்குப் போதும். இதை அதிகமாகச் சாப்பிட்டால் கடுமையான ஈரல் சேதம் ஏற்பட்டு உயிருக்கே ஆபத்துக் கூட வரலாம. அஸ்பிரின்-பரசிட்டமோல் கலந்திருக்கிற மருந்தை அதிகமாகவும், நீண்டகாலத்திற்கும் சாப்பிட்டால் சிறுநீரக நோய்கள் வரும். இரண்டில் ஒன்றை ஒரு சமயத்தில் சாப்பிடுதல் நன்று. அடுத்ததாக நுண்ணுயிர்க் கொல்லிகள், இவை தாமதமாகச் செயற்படுவன

## ஐக்கிய இலங்கைக்குள்

# சமாதானவாழ்வை உருவாக்குவதே எமது தலையாய குறிக்கோள்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி, எக்காலத்திலும் பிரிக்க முடியாத வடக்கு-கிழக்கு ஒரு அலகு ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வை கட்டி எழுப்பும் அடிப்படை இதுவே இதுவே எமது இலக்கு

சாவற்கட்டு மற்றும் தென்மராட்சி பிரதேசமக்கள் ஈ.பி.டி.பி. யின் யாழ். தலைமைச் செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்தபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

சுமார் இருபது வருடங்களுக்கு முன்பாக நீங்கள இந்த கட்டடத்திற்கு வரும் போது பொழுது போக்கு எண்ணத்துடன அல்லது மகிழ்ச்சியைக் கொண்டாடும் நோக்கத்துடன் வந்திருக்கக் கூடும். ஆனால்இன்று ஒருவித ஏக்கத்துடனும், ஒரு வித எதிர்பார்ப்புடனும, ஒரு தேவையுடனும் தான் வந்திருக்கிறீர்கள. இந்த நிலை மாற வேண்டும்.

உங்களைத் தேடிவரக் கூடிய சூழல் தற்போது எனக்கில்லை. அது ஏன் என்பது உங்களுக்கு நன்கு தெரியும். நான் தற்போது ஒருவிதத்தில் பங்கருக்குள் வாழ்ந்து கொண்டிருந்தாலும் பொது மக்களாகிய உங்களைச் சந்திக்காமல் இருக்கவில்லை. உங்களின் தேவைகளையும், பிரச்சினைகளையும் கண்டு கொள்ளாமல்இருக்கவில்லை. உங்களின் குரலைச் செவிமடுக்காமல் இருக்கவில்லை.

தற்போது தொடர்ந்து கொண்டிருக்கும் போர் நடவடிக்கைகளை தாக்குதல் சம்பவங்களைப் பொது மக்களாகிய நீங்கள் விரும்பவில்லை. உங்களில் பெரும்பாலானவர்களுக்கு அமைதியும், நிம்மதியுமானவாழ்க்கையே தேவைப்படுகிறது.

மாணவர்கள் சத்தமிட்டுக் கொண்டிருக்கும் ஒரு வகுப்பறையில் நுழையும் ஆசிரியர் மெல்லிய குரலில் அமைதி எனக்கூறினால் அமைதி வந்துவிடாது. மாறாக, உரத்த தொனியில் மேசையைத் தட்டி பலத்த சத்தத்துடன் அமைதி எனக் கூறும் போது நிசப்தம் நிலவும்.

அதேபோல பலமான சத்தத்துடன்வரும் யுத்தத்தை நிறுத்த வேண்டுமானால் பொது மக்களாகிய நீங்கள் பலத்த சத்தத்தில் அமைதி என முழங்க வேண்டும். யுத்தம் வேண்டாம் எனக் குரல் எழுப்ப வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

நாங்கள் எப்போதும் உங்கள் வீட்டுப்பிள்ளைகளாக வாழ விரும்புகின்றோம் எங்களிடம் இரட்டைத்தன்மை இல்லை. ஜனாதிபதியுடன் பேசுவதையே உங்களிடமும், உங்களிடம் பேசுவதையே ஜனாதிபதியிடமும் பேசுகின்றேன்.

ஆனால்இங்குசிலர் இருக்கின்றனர். உங்களுக்கு முன்னால் வந்து வீரம் பேசுவார்கள். அரசாங்கநிர்வாகத்தைக் கண்டனம் செய்வார்கள். மாற்றுக் கட்சிகளை எள்ளி நகையாடுவார்கள். எனினும் ஜனாதிபதியுடன் பேசும் போது, ''அது அரசியல் எங்களுக்கும் அச்சய இருக்கிறது. மிரட்டல் தொடர்கிறது'' என்றெல்லாம் கூறிக் கூழைக் கும்பிடு போட்டு நிற்பார்கள். தங்களது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வர். இவ்விதமான அரசியலுடன் எங்களுக்கு உடன்பாடில்லை என்றார்.

(க)

# விண்ணப்பம் கோரல்

(அரியாலை)

காரியாலய காரிய சகாயர், சுகாதாரத் தொழிலாளி, நூலக சேவகர், காவலாளி, உழவுஇயந்திர சாரதி ஆகிய பதவிகளுக்கு அமைய அடிப்படையில ஆள்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் ஊர்காவற்றுறை பிரதேசசபையால் கோரப்பட்டுள்ளது.

(செ-106)

# காரை நகர் ஊரிக்கு நீர்விநியோகம் ஸ்தம்பிதம்

[ஊர்காவற்றுறை]

காரை நகரில் ஊரிப் பகுதிக்கான குழாய் நீர் விநியோகம் கடந்த ஒருமாதமாகத் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீர் விநியோகத்திற்கான பம்பி பழுதடைந்துள்ளமையினாலே நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

இதுபற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்திய போதிலும் கூட அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

[செ-75]

# நடமாடும் செயலக சேவை நயினாதீவில்

[ஊர்காவற்றுறை]

நயினாதீவு மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் முகமாக வேலணைப் பிரதேச செயலகத்தின் நடமாடும் செயலக சேவை எதிர் வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நயினாதீவு மத்தியிலுள்ள

# ஆவணிமூல

ஆலோசனையைச் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். நிறையப் பேர் எப்படியென்றால். டாக்டரிடம் போவார்கள். மருந்து சீட்டு எல்லாம் வாங்கிக் கொள்வார்கள். ஆனால் எந்த மருந்தை எந்த அளவில், எப்போது சாப்பிடவேணும் என்றுடாக்டர்சொல்கிறதைச் சரியாகக் காதில் வாங்கிக் கொள்வது இல்லை. அல்லது புரிந்து கொளவது இல்லை.

சிலர் இரண்டு மாத்திரைக்குப் பதில் நாலு மாத்திரை சாப்பிட்டால வியாதி சீக்கிரம் சரியாகி விடும் என்று நினைக்கிறார்கள். இன்னும் சிலர் உடப்பு சரியாக ஆனதும் மருந்து சாப்பிடுவதை நிறுத்தி விடுகிறார்கள். இவை மிகவும ஆபத்தான விஷயங்கள். ஆதலால் மிகவும்ஜாக்கிரதையாக கவனமாக இருக்க வேண்டும். நாம் சர்வ சாதாரணமாக வாங்கிச் சாப்பிடுகிற சில மாத்திரைகளைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து வைத்துக் கொளவது நல்லது.

அஸ்பிரின் சம்பந்தப்பட்ட மாத்திரைகள் சாலிசிலிக் அமிலத்திலுடையஒருவேதி விளைபொருள, ஜுரம், வீக்கம், தலைவலி, மூட்டுவலி, உடல் வலி ஆகியவற்றை தணிக்கிற குணம் இதற்கு உண்டு. ரத்தத்தில் கட்டி உண்டாவதை இது தடுக்கிறது அதனால் இதய தாக்குதல் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் குறைகிறது. இருந்தாலும் 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவர் கண்கா

பட்டு உயிருக்கே ஆபத்துக் கூட வரலாம. அஸ்பிரின்- பரசிட்டமோல் கலந்திருக்கிற மருந்தை அதிகமாகவும், நீண்டகாலத்திற்கும் சாப்பிட்டால் சிறுநீரக நோய்கள் வரும். இரண்டில் ஒன்றை ஒரு சமயத்தில சாப்பிடுதல் நன்று. அடுத்ததாக நுண்ணுயிர்க் கொல்லிகள், இவை தாமதமாகச் செயற்படுவன. பாதியில் நிறுத்தி விடக் கூடாது. சில வெறு வயிற்றிலும், சில சாப்பிட்ட பின்பும சாப்பிடவேண்டும். இது சிலருக்கு வயிற்றுப்போக்கை உண்டாக்கி விடும்.

மருந்து சாப்பிட்டுக் கொண்டு மதுவையும் சாப்பிடக் கூடாது. கருவுற்ற பெண்கள் டாக்டரைக் கேட்காமல் எந்த மருந்தையும் சாப்பிடக் கூடாது. ஒருவர் தனக்குத் தானே வைத்தியம் செய்பவர். அவருக்கு ஒரே நேரத்தில் ஏகப்பட்ட கோளாறுகள் வந்துவிட்டது. கடைக்குப் போய் காய்கறி வாங்குவது போன்று பை நிறைய மருந்து மாத்திரைகள் வாங்கிக் கொண்டு வந்தார். இவ்வளவு மாத்திரைகளும் சாப்பாட்டுக்கு முந்தியா? பிந்தியா என்று வேறு ஒருவர் கேட்டார். அதைப் பற்றிக்கவலையில்லை ஐயா! ஏனென்றால், எனக்கு ஆகாரமே இது தான் ஐயா! என்றார் அவர். □

தென்கச்சி
கோ. சுவாமிநாதன்

## உலக சிறுவர் தினம்

[யாழ்ப்பாணம்]

யாழ் சுகவாழ்வு நிலையத்தினரால் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் உலக சிறுவர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

சிறுவர் தினத்தையொட்டி சுகவாழ்வு நிலையத்தினரால் சிறுவர்நிலையத்தைச் சேர்ந்தவர்களிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

[உ-104]

நூலக சேவகர், காவலாளி, உழவுஇயந்திர சாரதி ஆகிய பதவிகளுக்கு அமைய அடிப்படையில ஆள்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் ஊர்காவற்றுறை பிரதேசசபையால் கோரப்பட்டுள்ளது.

(செ-106)

## ஆவணி மூல திருவிழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் நாளை ஆவணி மூலத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இத்திருவிழாவினை யாழ்ப்பாணம். சாவற்காட்டுகிராமிய அபிவிருத்தி கடற்றொழிலாளர் சங்கம் இவ் வருடம் முதல் செய்யவுள்ளது.

அன்றைய தினம அம்பாளுக்கு சங்காபிஷேகமும் தொடர்ந்து பூசையும் இடம் பெறும். (உ)

## சந்நிதி முருகன் ஆலயத்தில்இன்று

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால்மு ப.10.00மணிக்கு நடத்தப்படும் தெய்வீக நிகழ்ச்சிகளில் இன்று 'சிந்தனைச் செல்வம்' என்றதலைப்பில் செஞ்சொற் செல்வன் இராசெலவவடிவேலின்சொற்பொழிவு இடம் பெறும்,

[செ-52]

* * *

ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ருபானந்தா உரையாற்றி வருமகந்தர் அநுபூதித் தொடரில் இன்று 'பேசா அநுபூதி' என்ற தலைப்பில் உரையாற்றுவார். [செ]

[செ-75]

## நடமாடும் செயலக சேவை நயினாதீவில்

[ஊர்காவற்றுறை]

நயினாதீவு மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் முகமாக வேலணைப் பிரதேச செயலகத்தின் நடமாடும் செயலக சேவை எதிர் வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நயினாதீவு மத்தியிலுள்ள

6→ஆம் பக்கம் பார்க்க

## இடத்திற்கிடம் வேறுபடும் தொலைபேசிக் கட்டணம்
### பாவனையாளர் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் செயறபட்டுவரும் தொலைத் தொடர்பு நிலையங்களில் இடத்திற்கிடம் வேறுபட்ட வகையில் கட்டணங்கள் அறவிடப்பட்டுவருவதாக பாவனையாளர்கள புகார் தெரிவித்துள்ளனர்.

உள்ளூர் தொலை பேசிக் கட்டணத்திற்கே ஒரு நிமிடத்திற்கு 03 ரூபா முதல் 10ரூபா வரையில அறவிடப்படுகிறதாம்.

ஞாயிற்றுக் கிழமைகளில் வழமையைவிட குறைந்த கட்டணமே அறவிடப்படுகின்ற போதிலும் சில இடங்களில் வழமை போன்றே கட்டணம் அறவிடப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. [க]

## பணிசிற்துள் மட்டத்தேள் கிராம அலுவலர் அவலம்
### கைதடி மேற்கில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பேக்கரி ஒன்றில் வாங்கிய பணிசை சாப்பிட முற்பட்ட போது அதனுள் மட்டத்தேள் செத்துக்கிடந்ததாம்.

கைதடி மேற்குப் பகுதியில் உள்ள பேக்கரி ஒன்றில் வாங்கிய பணிசை உண்பதற்கு முயன்ற கிராம உத்தியோகத்தருக்கே இந்த அவல நிலை ஏற்பட்டுளளது.

இச் சம்பவம் குறித்து கைதடிச் சுகாதாரப் பரிசோதகரிடம் புகார் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

விற்பனைக்காக அல்லது பொது இடங்களில் உணவுப் பண்டங்களை தயாரிப் போர் பொதுமக்களின் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்காதவகையில் பொது நலன் கருதி மிக விழிப்புடன் சுகாதாரத்தைப் பேணுவது அவசியம் என்று பொது மக்கள் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (க-இ)

# பாகிஸ்தானுக்கு தகவல் வழங்கிய இந்தியக்கடற்படை அதிகாரிகைது

(புதுடில்லி)

இந்தியக்கடற்படை ஆயுதக்கிடங்கின் அதிகாரி ராஜ்குமார் பாகிஸ்தானுக்கு இந்தியகடற்படை நிலைவரங்களை இரகசியமாக அனுப்பினாரென்ற குற்றத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் விசாகபட்டணத்தில் கைதுசெய்யப்பட்ட கேணல் ராஜ்குமார் பங்களாதேஷிலுள்ள தனது நண்பர் மூலமாக அவ்வப்போது படை இரகசியங்களை அனுப்பி பாகிஸ்தானுக்கு உதவியிருக்கிறார் என்று புலனாய்வுத்துறை கருதுகிறது.

கேணல் ராஜ்குமார் இந்த வார முற்பகுதியிலிருந்து விசாரிக்கப்பட்டு வந்திருக்கிறார் அதன்பின்பே கைது செய்திருக்கிறார்கள் இவரை நீதிமன்றக் காவலில்வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி தேவேந்திர சிங்குடன் ராஜ்குமார் தொடர்பு வைத்திருந்தார் என்றும் அவர் ஒரு உளவுக்கும்பலின் தலைவரென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

# மாதத்தில் நான்கு நாட்கள் நேபாளத்தில் மதுபானம்விற்கத்தடை

## மாதர் அமைப்பின் முயற்சி பலித்தது

(காட்மண்டு)

நேபாளத்தில் மாதத்தில் நான்கு நாட்கள் மதுபானம் விற்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் ஆண்கள் கூடுதலாக மதுபானம் அருந்துவதால் சமூகச் சீர் கேடுகள் மலிந்து வருவதையடுத்து நேபாள பெண்கள் அமைப்புகள் அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியதால் இத்தடையை அரசு அறிவித்துள்ளது.

இதன்படி மாதத்தில் முதல் இரண்டு தினங்களும் மாதத்தின் கடைசி இரு சனிக்கிழமைகளும் மது விற்பனை செய்யக்கூடாது.

அத்துடன் கிராமங்களில் இரண்டு மதுபான விற்பனை நிலையங்களும் நகரங்களில் நான்கு விற்பனை நிலையங்களும் மாத்திரம் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

நேபாள பெண்கள் சம்மேளனத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்பட்ட பேச்சுவார்த்தைகளின்படி 21 வயதிற்கு குறைந்தவர்கள் மாதுபானங்களை வாங்குவதோ குடிப்பதோ தண்டனைக்குரிய செயலெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நேபாள அரசாங்கத்துக்கும் நேபாள பெண்கள் சம்மேளனத்துக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது பல இலட்சம் பெறுமதியான மதுபான வடிசாலையொன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (து)

# 2தலைகள்; 3கால்களுடன் பிறந்த பெண் குழந்தை

(சென்னை)

ஓர் உடல், இரண்டு தலைகள், மூன்று கால்கள், இரண்டு கைகள் ஆகியவற்றுடன் ஒரு பெண்குழந்தை பிறந்துள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள கிராமம் ஒன்றில் பிறந்த இக் குழந்தையைப் பார்வையிடுவதற்காகதினந் தோறும் பெருமளவு மக்கள் செல்கிறார்களாம். (செ)

# 'ஆஸஸ்' கிண்ணம் குறித்து பலத்த சர்ச்சையாம்

## கிரிக்கெற் ரசிகர்கள் குழப்பம்

(லண்டன்)

இங்கிலாந்து- அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் 'ஆஸஸ்' கிண்ணத்திற்காக நடத்தப்பட்டுவரும் ரெஸ்ற் கிரிக்கெற் போட்டிகள் இம்முறை முடிவுற்ற பின்னர் ஆஸஸ் கிண்ணம் அவுஸ்திரேலியாவுக்கு கொண்டு செல்லப்படவேண்டுமா? அல்லது இங்கிலாந்திலேயே தொடர்ந்து வைக்கப்படவேண்டுமா? என்பதில் சர்ச்சை தோன்றியுள்ளன.

தொடர்ந்து ஏழு தடவைகள் கிண்ணத்தை வென்ற அவுஸ்திரேலிய அணி ஆஸஸ் கிண்ணத்தை தமது நாட்டிற்கு கொண்டுசெல்ல முயற்சித்து வருகிறது. ஆனால் ஆஸஸ் கிண்ணம் தொடர்ந்து வோட்ஸ் மைதானத்திலுள்ள நூதனசாலையில் வைக்கப்பட வேண்டுமென இங்கிலாந்து அதிகாரிகள் கூறிவருகின்றனர்.

இங்கிலாந்து அதிகாரிகளின் இக்கூற்று தமக்கு கவலையளிப்பதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணித்தலைவர் ஸ்ரீவ்வோ கூறியிருக்கின்றார்.

ஆஸஸ் ரெஸ்ற் கிரிக்கெட்டின் 300 போட்டிகளில் கலந்துகொண்ட அவுஸ்திரேலிய அணி 120 தடவைகள் வெற்றிபெற்றுள்ளது. இங்கிலாந்து அணி 94 தடவைகள் மட்டுமே வெற்றி பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-8)

# மலேசிய - தாய்லாந்து எல்லையில் அதிகரிக்கும் ஆயுதக் கடத்தல்

## மலேசிய பிரதமர் தவிப்பு

(பாங்கொங்)

தாய்லாந்திற்கும் மலேசியாவிற்கும் இடையிலான எல்லைப் பகுதியில் ஆயுதங்கள் கடத்தப்படுவதை தடுக்க எல்லைப் பகுதியில் பாதுகாப்பு தீவிரப் படுத்தப்படவுள்ளதென மலேசியப் பிரதமர் மகதீன் முகமட் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்து மற்றும் மலேசியாவின் எல்லைப் பகுதியில் மின்வேலிகள், பாரிய காவலரண்கள் ஏற்படுத்தப்பட்டும் கூட ஆயுதக் கடத்தல் மற்றுமஆட்கடத்தல் போன்றவற்றை தடுக்க முடியாமல் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; மலேசியாவில இயங்கிவரும் அமைப்பான 'குங்லான் முஜாகுதீன் மலேசியா' என்ற அமைப்பே அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் அவற்றைத் தடுப்பதற்கு தாயிலாந்து எமக்கு உதவ வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## உலக தரிசனம்

• இவ்வாயுதங்களைமலேசிய அமைப்புகள் கடத்துவதை தடுப்பதோடு அதற்கு உடந்தையாகவுள்ள தாய்லாந்தின் சிலஅமைப்புக்களையுமதடுக்க இருதரப்பு எல்லைப் படையினர் உதவ வேண்டும என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் சட்டவிரோதமாக ஆயுதம் கடத்தும் அமைப்புக்களை இனங்கண்டு அவர்களுக்கு உரிய தண்டனை வழங்குவதுடன் உடந்தையாக செயற்படுபவர்களையும் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும என பிரதமர் முகமட் தெரிவித்துள்ளார். (க-07)

# அன்னை தெரேசாவின் பிறந்த தினம் நேற்று கோலாகலமாக அனுட்டிப்பு

[கல்கத்தா]

இந்தியாவின் கல்கத்தாவில் அன்னை திரேசாவின் 91 வது பிறந்த தினம் நேற்று அன்னையால் ஸ்தாபிக்கப்பட்ட இல்லத்தில் நினைவு கூரப்பட்டது.

இத் தினத்தில் அன்னையின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய 35 ஆயிரம் பக்கங்களைக் கொண்ட அறிக்கையையும் வத்திக்கான் நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

1910 ஆம் ஆண்டுஆகஸ்ட் 26 ஆம் திகதி மசதோனியாவில் பிறந்த அன்னை திரேசா 1937 ஆம் ஆண்டு மே மாதம் இந்தியாவிற்கு வந்து கல்கத்தாவில் தனது பணியைத் தொடங்கினார்.

52 வருடமனிதத் தொண்டு புரிந்த அன்னை திரேசா 1997 ஆம் ஆண்டு காலமானதும் தெரிந்ததே. (க-7)

# நவீன ஆயுதங்களை கொள்வனவு செய்ய இந்தியா முயற்சி

## ஜெனரல் முஷாரப் குற்றச் சாட்டு

(புதுடில்லி)

இந்தியா நவீன ஏவுகணைகளை ரஷ்யாவிடம் வாங்க முயற்சிக்கிறது, அதன் மூலம் இராணுவ பலத்தை அதிகரிக்க முயற்சிப்பதாக பாகிஸ்தான் அதிபர் முஷாரப் குற்றம் சாட்டியுள்ளார்.

ரஷ்ய பத்திரிகையான கோமார் சந்தாவுக்கு அளித்த பேட்டியிலேயே முஷாரப் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இது ஆசியப் பிராந்தியத்தில ஆயுதப் போட்டியை ஏற்படுத்தும். எனவே இந்தியாவின் இந்தப் போக்கு மிகவும் கவலை அளிக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

மேலும்பாகிஸ்தான் ரஷ்யா இடையே உள்ளஉறவு அவரவர் சொந்த மதிப்பைக் கொண்டு நீடித்து வருகிறது என்றும் அதில் பாதிப்பு வந்து விடக்கூடாது என்றும் தெரிவித்துள்ளார். (க-7)

# இணையத் தளம் பாவனைக்கு ஆப்கான் அரசு தடை

(காபுல்)

ஆப்கானிஸ் தானில் ஆளும் தலிபான் அரசினர் மக்கள் இணையத்தைப் பயன் படுத்துவதைத் தடை செய்துள்ளாது.

நாட்டிலே ஒரேஒரு இணையத்தளம் மாத்திரம் அரசு நடத்தலாமென்றும் நாட்டு மக்களோ நிறுவனங்களோ இணையத்தளத்தைப் பயன்படுத்த முடியாதென்றும் அரசு தடைவிதித்துள்ளது.

அரசாங்க இணையத்தளங்கூட தகுதிவாய்த்த ஒருவரின் கண்காணிப்பின் பேரில் இயங்க முடியுமென்றும் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 வருடங்களாக ஆப்கானிஸ்தானில் பொழுதுபோக்கு அம்சங்களோ தொலைக் காட்சிகளோ கிடையது.

குறிப்பாக அங்கு வாழ்பவர்கள் தமது கலை உணர்வுகளை வெளிப்படுத்தமுடியாது வெளி நாட்டவர்களுடன் எந்தவிதத் தொடர்பும் தொலைபேசி உட்பட வைத்திருக்கவும் முடியாது எந்தவிதமான வசதிகளும் அங்கு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (து)

# பலஸ்தீனரின் சூட்டுக்கு இஸ்ரேலியர் மூவர் பலி

## பெரும் மோதல்வெடிக்கும் அபாயம்

(ஜெருசலேம்)

இஸ்ரேலியகாஸாப்பகுதியில் நேற்று முன்தினம் நேஜகலின் என்னும் இடத்தில்யூத குடியிருப்புகளுக்குள் புகுந்தபலஸ்தீனர் மூன்று இஸ்ரேலியப் படையினரை சுட்டுக் கொன்றுள்ளனர்;

இஸ்ரேல் படையின் முகாம்களுக்குள் உட்பிரவேசித்த பலஸ்தீனப் படையினர் இருவர் கைகுண்டு வீசியதோடு சரமாரியாக துப்பாக்கி பிரயோகம் நடத்தியதில் மூவர் கொல்லப்பட்டதுடன் 7 பேர் படுகாய மடைந்துள்ளனர்;

இதே வேளை இத் தாக்குதலை தாமே நடத்தியதாக பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் ஜனநாயக முன்னணியினர் உரிமை கோரியுள்ளனர்.

இத் தாக்குதலுக்கு பதிலடி வழங்க இஸ்ரேல் படையினர் தயாராகி வருவதாகவும் இதனால் பாரிய மோதல் ஒன்று மீண்டும் நிகழும் அபாயம் காணப்படுவதாக இஸ்ரேலிய பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது; (க-7)

# தேர்தலை யொட்டி பாக்-அலுவலகங்களில் முஷாரப்பின் கையாட்கள்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முக்கிய பதவிகளில் இராணுவ அதிகாரிகள் அமர்த்தப்பட்டுக் கொண்டுவருவதாகஅரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இராணுவ ஆட்சியாளராக இருந்து அரசியல் யாப்பையே மாற்றிக்கொண்டிருக்கும் அதிபர்ஜெனரல் முஷாரப் அடுத்த ஆண்டு ஜனநாயகத் தேர்தல் நடைபெறப்போகிறதென்று அறிவிக்கின்றார்.

இதே வேளை அரசதிணைக் களங்களில் ஒய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளையும் சேவையிலுள்ள இராணுவ அதிகாரிகளையும் நியமித்து வருவது தேர்தலை முன்னிட்டோ என்று அரசியில் அவதானிகள் கருதுகின்றார்கள். (வ)

---

## நடமாடும்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசசபை உப அலுவலகத்தில் காலை 9.00 மணி தொடக்கப் பி.ப 4.00 மணி வரை இச் சேவை நடைபெறும்.

இதன் போது மக்கள் தமது தேவைகளையும், பிரச்சினைகளையும் தெரிவித்து அதற்குத் தீர்வு காணமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது; [செ-75]

# 24 மணித்தியாலத்துள் 21 பேர் படுகொலை

## கொலம்பியாவில் சம்பவம்

(பொகொடா)

கொலம்பியாவில் பலஇடங்களில் இடம் பெற்ற குண்டு வெடிப்புகள் மூலம் கடந்த புதன்கிழமை 24 மணி நேரத்துள் மட்டும் 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர்;

இதே வேளை கெரில்லாக்களின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியை கொலம்பிய இராணுவம் சுற்றிவளைத்ததில் 2 ஆயிரம் கெரில்லாக்கள் சிக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது; (ந-3)

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றந் தரூஉம்பகை
- குறள்

வலம்புரி

## பிரசவ மரணம்

ஒரு காலத்தில் தாய் மரணவீதம் மிக உயர்ந்த எண்ணிக்கையை காட்டி நின்றது. பிரசவத்தின் போதுஏற்பட்ட மரணங்களின்உச்சமே தாய் மரண அதிகரிப்புக் குக் காரணமாயிற்று. வீட்டில் இடம் பெற்ற பிரசவங்களும் பயிற்சியளிக்கப்படாத மருத்துவிச்சிகளின் மேற்பார்வையில் இடம்பெற்ற பிரசவங்களுமே தாய் மரணத்திற்குகாரணமாயின.

எனினும் மருத்துவத்தின் வேகமான வளர்ச்சியின் பயனாகஒவ்வொரு கிராமங்களிலும் அமைக்கப் பட்ட பிரசவ விடுதிகளும், பயிற்சியளிக்கப் பட்ட மருத்துவ மாதுக்களின் வெளிக்களத் தரிசிப்பும், தாய் மரணத்திற்குசாவுமணி அடித்தது.

இவையாவற்றுக்கும்மேலாக கர்ப்பிணித் தாய்மாருக்கான சிகிச்சை நிலையங்கள், கற்பமுற்று நான்கு மாதங்களில் ஒரு தாய்க்குத் தேவையான ஆலோசனைகளையும் ஆரோக்கியநிவாரணசிகிச்சையையும் அளித்தது இதனால் இரத்தசோகை (அனிமியா) மந்த போசனை போன்ற குறைகள் நிவர்த்திக்கப்பட்டன.

சமகாலத்தில் பிரசவத்தின் போதான தாய் மரணம்இல்லையென்னும் அளவிற்கு நாடுமுன்னேற்றம் கண்டுள்ள போதிலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த வெள்ளிக் கிழமை இளம் ஆசிரியை ஒருவர் பிரசவத்திற்கான சத்திரசிகிச்சையின் போதுமரணம் அடைந்துள்ளார்.

மருத்துவ வசதிகள்முன்னேறிய இக்கால கட்டத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையை நம்பி அங்கு சென்று தங்கியிருந்த ஒரு இளம்தாய்க்கு யாழ் போதனா வைத்திய சாலை கொடுத்த பரிசு என்ன? இத்தகையமரணங்கள் வெளிநாடுகளில் நடந்திருப்பின் சம்பந்தப்பட்ட வைத்தியர்கள் இப் போது கம்பி யெண்ணிக் கொண்டிருப்பார்கள். குற்றத்தின் போது செலுத்த வேண்டிய தொகையும் ஏகப்பட்டதாகவேயிருக்கும்.

ஆனால் இது யாழ்ப்பாணமாயிற்றே டாக்டர்கள்தவறுவிட்டாலும் அதனை விதியின் பெயரால் மக்கள் ஏற்றுக்கொள்கின்றனர். இதனால் எவர் எப்படி இறந்தாலும் நம் டாக்டர்கள் கவலைப்பட மாட்டார்கள். என் செய்வது பின் தங்கிய மக்களாகிய நமக்கு பின் தங்கிய டாக்டர்கள் தானே லாயக்கு. ஏற்றுக் கொள்வோம்;

ஆனால் ஒன்று மட்டும் கவனிக்க வேண்டியது! அது எதுவெனில் யாழ் மருத்துவ பீடத்தின் உருவாக்கம் பற்றியதாகும்.

# தமிழ்மொழியின் மேம்பாட்டுக்கு உழைத்திட

# ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் முன்வர வேண்டும்

மு. விக்னேஸ்வரன்
B. A. Dip. in Edu.

தமிழ் மொழியைத் தாய் மொழியாகக்கொண்ட பிரசையொருவருக்கு அம்மொழியில் பூரணமானபாண்டித்தியம்இருத்தல்வேண்டும். இவ்விலக்கினை அடைய ஏதோவொரு வகையில் கல்வி உதவ வேண்டும்: அக்கல்வியானது முறையே கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகியவற்றின் திறன்களிலேயே தங்கியுள்ளது ஆனால் பேச்சு எழுத்துத்திறன் குறிப்பாக தமிழ் பாடத்தை விசேடமாகக்கொண்டு வெளியேறும் பட்டதாரியொருவரிடம் கூட தற்போது இல்லாதமை வேதனைக்குரியதே. இதனை இன்று ஆசிரியர்களாக நியமனம் பெறுவோர் தமிழ்ப்பாடத்தைக் கற்பிக்க மறுப்பதிலிருந்து அறியமுடிகின்றது: இலக்கணம், எழுத்துப் பிழை போன்ற குறைபாட்டைப் பல்கலைக்கழகத்தின் துறை சார்ந்தோரும்கூட ஆரம்பக் கல்வியில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையைத் தம்மீது திணிப்பது முறையல்ல எனவும், இதைத் தாம் தீர்ப்பதற்குக் காலம் போதாது எனத் தட்டிக் கழிப்பதையும்; பத்திரிகைகள், கருத்தரங்குகள், நூல் வெளியீடுகள் என்பன சுட்டிநிற்கின்றன; எனவே இதைத் தீர்க்க வேண்டிய பாரிய பொறுப்பு எமது ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் கையிலேயே தங்கியுள்ளது என்பது வியக்கத்தக்கது;

### ஆரம்பக்கல்வியே அத்திபாரம்

இலங்கையின் கல்விக் கட்டமைப்பில் ஐந்து வயதைப் பூர்த்தி செய்த பிள்ளை தரம் ஒன்றில் தனது காலடியைப் பதிக்கின்றது அதற்கு முன்பாக பிள்ளை முன்பள்ளியிலிருந்தோ அல்லது தனது குடும்பசமூக சூழலிலிருந்தோ தனது தாய்மொழி பற்றிய முன்னறிவைத் தேடிக்கொள்கிறது. இதன் தெளிவைப் பிள்ளையின் உரையாடல் கட்டியம் கூறுகின்றது; தனது தேவைகளைப் பெற்றோரிடமோ ஆசிரியரிடமோ அன்றித்தனது சகமாணவரிடமோ வெளிப்படுத்தக்கூடிய நிறைவு செய்து கொள்ளக் கூடிய சொற்களஞ்சியத்தை ஆரம்பத்தில் கேட்டல் மூலமாக அப்பிள்ளை அறிந்து கொள்கிறது. அதைப் பேச்சு மூலம் வெளிப்படுத்துகிறது. படிப்படியாக வாசிப்பு மூலம் அறிய முயல்கின்றது. மேலும் எழுத்து மூலம் வெளிப்படுத்த எத்தனிக்கின்றது. இவ்விடத்திலேயே மாடிக் கட்டடத்தைத் தாங்கிக் கொள்ள எந்தளவுக்குப் பலமான அத்திபாரம் முக்கியமானதோ அந்தளவுக்கு உயர் கல்விக்கு அத்திபாரமாக ஆரம்பக் கல்வி அமைய வேண்டும் என்பதில் ஆரம்பக்கல்வி ஆசிரியராகிய நாமும், ஆசிரியராகப் போவோரும் உறுதி பூணவேண்டும். இன்று ஆரம்பக் கல்வித்துறையில் பொருத்தமில்லாத பலர் செல்வாக்கு மிகுதியால் நுழைந்து தாண்டவமாடினாலும் கூட ஆரம்பக்கல்வி ஊடாக மொழிக் கல்விக்கு அடித்தளத்திலிருந்து அத்திபாரமிட்டு எமது எதிர்காலச் சந்ததிக்குத் திறம்படக் கற்றுக்கொடுக்கும் சீரிய தன்மையையும் சிந்தனையையும் ஒட்டுறவையும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் உள்வாங்கிக்கொள்ள வேண்டும், எரியும் தீபமொன்றிலிருந்தே, இன்னொரு தீபத்தை ஏற்ற முடியுமென்பதை ஆரம்பக் கல்வி ஆசிரியர்களாகிய நாம் அங்கீகரிக்க வேண்டும்: அத்துடன் இவ்விடயத்தில் பூரண பாண்டித்தியம் பெற்றிருக்க வேண்டும்;

### தமிழ்மொழி வளர்ச்சி

கால வோட்டத்திற்கேற்ப மொழி கற்பிப்பதில் புதுப்புது உத்திகள் முன்வைக்கப்பட்டும் தான் தோன்றியுள்ளபோதும் கற்பித்தல் முறை மாறுமேயன்றி கற்பிக்கும் விடயம் மாறாது என்பதில் நாம்தெளிவினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்; ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனித்துவமுண்டு; மகத்துவமுண்டு; சிறப்புண்டு. அதுபோன்றே தமிழ் மொழிக்குமுண்டு. எனினும் அறிவியல் ஆற்றல்களை வெளிக்கொணரும் ஆற்றல் மிகு மொழியாக தமிழ் மொழி வளர்வதற்கு ஆரம்பக்கல்வி ஆசிரியர்களே ஆரம்ப வகுப்புகளில் தமிழ் மொழி கற்பிப்பதில் மிக்க அவதானமாகக் கற்பிக்க முன்வரவேண்டும். வளர்ந்தவர்களுக்கு அந்நிய மொழிகளை இலகுவில் குறுகிய காலத்தில் கற்பிக்கலாம். கையாளப்பட்ட முறைகளை எம்மவர்கட்கு மேற் கொள்ள முடியாது. பதிலாக சிறிய பாடல்கள், கதைகள், உரையாடல்கள் மூலம் எழுத்தறிவினை ஊக்குவிக்கலாம். சிறுபராயத்திலேயே எழுத்துகளை அவற்றுக்குரிய வரி வடிவிலேயே எழுதப் பழக்கவேண்டும். உபகரணங்களைப் பிள்ளைகள் ஒழுங்காகப் பயன்படுத்துகின்றனரா என்பதை அவதானிக்க வேண்டும். எழுதுகோல்களையும், எழுதும் சாதனங்களையும் எழுதும் முறைகளையும் பிள்ளைகள் சரியான முறையில் கையாளுகின்றனரா என்பதைப் பொறுமையுடன் ஆசிரியர் அவதானித்து சரியான கருவிக்கையாட்சியைப் பின்பற்றச் செய்தல் மிகப் பொருத்தமானது.

### ஆசிரியரின் கவனிப்பு

எழுத்துச் சிறப்புற பிள்ளையின் பேச்சு மொழியிலும் சொற்களை வாசிக்கும் விதத்திலும் ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும். இதற்காக சிறுகதைகள், பாடல்கள் சிறிய உரையாடல்கள் என்பவற்றைப் பயன் படுத்தலாம். இதன் மூலம் தமிழ் மொழியின் ஒவ்வொரு உச்சரிப்பையும் கவனித்து வந்தால் எழுத்துப் பயிற்சிகளு அது துணையாக அமையும். உச்சரிப்புப் பிழைக்கும் போது எழுத்து மொழியில் பிழைகள் மலிந்து காணப்படும்: இதைச் சீர்செய்தால் இடை நிலை உயர்நிலை வகுப்புகளில் தவறுகள் ஏற்படாது ஒலிமயக்கத்தை விளைவிக்கும். ந, ண, ன, ல, ழ, ள ற, ர, ட போன்ற எழுத்துக்களின் சரியான உச்சரிப்புத் தெளிவின்மை வாக்கியங்களின் பொருளை மாறுபடச் செய்யும் என்பதைக் கருத்தில் கொண்டு செயற்படல் வேண்டும் இதற்கான வழி காட்டல் ஆரம்ப வகுப்புகளிலேயே ஆரம்பிக்கப்பட வேண்டும். ஏனெனில்இவ்வயதில்பிள்ளை எவ் விடயத்தையும் அப்படியே பாவனை செய்யும் திறனையுடையது. எனவே இவ்வாசிரியர்கள்மொழியைச் சரியாக உச்சரித்துக்காட்டி எழுதிக்காட்டிக் கற்பித்தால் பிள்ளைகள் அதனைச் சரியாகப்பின்பற்றுவர்: இது அப்பிள்ளையின் வழிகாட்டலுக்கும் எதிர் காலத்துக்கும் வழிவகுக்கும்;

### தார்மீகப் பணியாக ஏற்கவேண்டும்

ஆரம்ப வகுப்புகளிலே தாய் மொழியான தமிழைக் கற்பித்தல் என்பது இலகுவான காரியமன்று. எனினும் அப்பணியில் ஈடுபடும் ஆசிரியர்கட்குத் தார்மீகக் கடமையுண்டு. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பதை மனத்திலிருத்தி பிள்ளைகளினுடைய பல்வேறு பட்ட குடும்பச்சூழல் பெற்றோர் மனப்பாங்கு பிள்ளைகளின் ஆர்வம், ஆற்றல் அரசின் கல்விக்கொள்கைகள், ஆசிரியரின் சமூக, பொருளாதார நிலை, குடும்பப்பின்னணி போன்ற பல்வேறு விதமான இடையூறுகள் மத்தியிலும் ஆரம்பக்கல்வித்துறை சார்ந்த அதிபர், ஆசிரியர்கள் தமது பொறுப்பை சமூகப் பணியாகவும் வரலாற்றுக் கடமையாகவும் எண்ணி எமது சிறார்களுக்குச் சிறந்த வழிகாட்டிகளாகத் திகழவேண்டும் எமது தாய் மொழியைப்பாதுகாக்க வேண்டும். இந்த அளப்பரிய பொறுப்பை ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் மனப் பூர்வமாக ஏற்று நடை முறைப்படுத்த முன்வர வேண்டும். □

# பட்டதாரிகள் வேலையற்றிருக்க ஓய்வூதியர்கள் சேவை செய்வதா?

## தொண்டர் நிறுவனங்களின் இணையம் சீற்றம்

(கொழும்பு)

பட்டதாரிகள் வேலைதேடி அலைந்து கொண்டிருக்கும் போது அறுபது வயதிற்கு மேற்பட்டோர் தொடர்ந்தும் சேவை செய்ய அனுமதிப்பது முறையற்றதும், அநீதியானதுமான செயலாகும்.

இவ்வாறு யாழ் மாவட்ட அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் இணையகம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பலர் இவ்வாறு சேவை நீடிப்புப் பெற்று வருகின்றனர். இதனால் பட்டதாரிகள் தமக்குரிய சந்தர்ப்பத்தை இழக்க நேரிடுகின்றது.

அறுபதுவயதைத் தாண்டியவர்கள் அரச சேவவையில் ஈடுபடக் கூடாது என சுற்றுநிருபம் வெளியிடப்பட்டும், இந்தச் சேவை நீடிப்பு உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் தொடர்ந்தும் இருக்கவே செய்கின்றனர்;

இதனைத் தடுத்து நிறுத்த பொதுச் சேவை ஆணைக்குழு வெற்றிடங்களைஉடன்நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது (செ)

## மலையக கலைஞர்களுக்கு சிவாஜி விருது

(கொழும்பு)

மறைந்த நடிகர் சிவாஜி கணேசனின் ஞாபகார்த்தமாக வருடந்தோறும் மலையக கலைஞர்களுக்கு சிவாஜி விருது வழங்கப்பட வேண்டும என பிரபல எழுத்தாளர் அந்தனி ஜீவா கோரிக்கை விடுத்துள்ளார்.

மலையகநட்சத்திரக்கலைப் பேரவையினால் நடிகர் சிவாஜிக்கு நிகழ்த்திய நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (செ)

## தினசரி தியானம்

### உடம்பு

உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண்

-ஔவைக் குறள்-

உடம்பாகிய என்னுள்ளே உயிராகிய இறைவா, உன்னை நீ விளக்கியருள்வாயாக.

உயிரை விளக்குதற்கென்றே உடல் இருக்கிறது: உயிர் இல்லா விட்டால் உடல் பிணமாய் விடும்: பின்பு உடம்பினைப் பண்படுத்தும் அளவு அதனுள் உயிரானது ஓங்கி மிளிரும்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

## திருகோணமலை திருமறைக்கலாமன்றத்தின் தமிழ் விழா செப்.2

[அரியாலை]

திருகோணமலை திருமறைக்கலாமன்றம் நடத்தும் தமிழ் விழா எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இரு நிகழ்வுகளாக நடைபெறவுள்ளது;

காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் பாரதி இலக்கிய அரங்கு எனும் தலைப்பிலான நிகழ்வில் இசைச் சித்திரம், இலக்கியப் பேருரை, விவாத அரங்கு, கவி அரங்கு, பரிசளிப்பு வைபவம் என்பன இடம்பெறும்;

மாலை 4.30 மணிக்கு பாரதி கலை அரங்கு நிகழ்வில் கலை முகம் சிறப்பு இதழ் வெளியீடு, சிறப்பு கூத்து என்பன நடைபெறவுள்ளன;

[செ-106]

ஜனாதிபதியின் பாராளுமன்ற உரை

## சபையில் நிராகரிக்கப்பட்டால்

# அமைச்சர்கள்இராஜினாமா செய்ய வேண்டும்

(கொழும்பு)

ஒத்திவைக்கப் பட்டுள்ள பாராளுமன்றம் மீண்டும்செப்ரெம்பர் மாதம் 7ந்திகதி கூட்டப்படும் போது ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா தொடக்கவுரை நிகழ்த்துவார். என ஏற்கனவே அறிவிக்கப் பட்டிருந்தது.

அவ்வாறு ஜனாதிபதிபாரா ளுன்றத்தில் உரையாற்றினால் அதனை சபை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆனால் ஐ. தே. கட்சி தன் பக்கம் 115 பாராளுமன்ற வு உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகத் தெரிவித்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியின் பாராளுமன்ற உரையை எதிர்க்கட்சியினர் எதிர்த்து வாக்களிப்பதன் மூலம் நிராகரிப்பார்களாயின்அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகுவதே ஜனநாயக மரபாகும் இந்நிலையில் ஜனாதிபதியின் தொடக்கவுரை சபையில் நிறைவேறாது போனால் அதுபெரும் கௌரவக் குறைவாக இருக்கு மென்பதால் அரசியல் அமைப்பின் 70சரத்தைப் பயன் படுத்தி செப்ரெம்பர் 7ந் திகதி பாராளுமன்றத்தைக் கூட்டாமல் ஒத்திவைக்கலா மென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந)

## வன்னியில் வயிற்றோட்டம் வேகமாகப்பரவும் அபாயம்

(வவுனியா)

சுண்டிக்குளம் பூனைத் தொடுவாய் பகுதியில் வயிற்றோட்டம் காரணமாக ஒன்றரை வயதுக்குழந்தை ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

சுண்டிக்குளம் பகுதியை சேர்ந்தஜெயக்குமார் கிங்ஸ்லி ஜெய்சி என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இப்பகுதியில் கடும் வரட்சி காரணமாக நன்னீர் உவர் நீராக மாறி வருவதுடன் குடி நீர் அசுத்தமடைந்ததனாலுமே வயிற்றோட்டம் பரவியுள்ளது.

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் வயிற்றோட்டம் பரவும் அபாயம் உள்ளதாகவும், குடி நீரை கொதிக்க வைத்து பருகுமாறும் சுகாதாரப் பகுதியினர் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை தர்மபுரம் வைத்திய சாலையில் வயிற்றோட்டம் காரணமாக மேலும் மூன்று குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [இ]

# புலிகளை பேச்சுக்கு அழைப்பது பற்றி ஐ.தே. கட்சி - ஜே.வி.பி யுடன் கலந்துரையாடல் நடாத்தப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

[கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார தேசிய நெருக் கடிகளை தீர்த்து வைத்து நாட்டைப் பலமாக கட்டிஎழுப்பும்நோக்குடன் ஐக்கிய தேசியக்கட்சியுடனும மக்கள் விடுதலை முன்னணியுடனும் அரசாங்கம் பேச்சுவார்த்தைநடாத்தி வருகின்றது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்ட அரசாங்க உத்தியோகத்தர் களுடனான கலந்துரையாடலொன்று நேற்று ஜனாதிபதிமாளிகையில் நடைபெற்ற போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது

தேசிய நெருக்கடி களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக நிரந்தரமானதும், அனைவருக்கும் பொதுவானதுமான செயல் திட்டங்களை நோக்கியே ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகிறது

தற்போது நாட்டில்இடம் பெற்றுவரும் இன மோதல் களை எவ்வாறு முடிவிற்கு கொண்டு வருவது, விடுதலைப்புலிகளுடன் எவ்வாறு பேசுவது, பேச்சு வார்த்தையில் அவர்களை எவ்வாறு பங்குகொள்ளச் செய்வதுஎன்பது பற்றியும், கலந்துரையாடல்கள் நடாத்தப்படவுள்ளது

அரசியலமைப்புச் சீர்திருத்தம் தேர்தல் முறையைமாற்றியமைப்பது போன்ற விடயங்கள் கலந்துரை யாடலில் முக்கியத்துவம் பெற்ற வையாகும்.

கட்டுநாயக்கா விமானத் தளத் தாக்குதலுக்கு சில சிங்களக் குழுக்களின் பண ஆசையும் காரணமாகும்

அது எப்படி இருப்பினும் அடுத்து வரும் இரு வாரங்களில் நாட்டின் அபிவிருத்திப் பணிகள் முன் னெடுத்துச் செல்லப்படும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். (வ)

### அரசவைத்திய

நாள் வேலை நிறுத்தப் பேராட்டத்தை நடத்தப் போவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

### விசுவமடுப்...

எழுச்சிக்குழுத் தலைவர் அல்பேட் தலைமையில் நடைபெற்றுள்ளது.

'தமிழர்தாயகம்த மிழீழத் தாயகம்' என்ற கோசத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. நிகழ்வில் எல்லைப் படை நிதியம் பொறுப்பாளர் ரமேஸ்அப்பா சிறப்புரையாற்றினார்,

கலைநிகழ்வுகளாக மௌலியனின் 'ஒரு கணக்கு பிழையானது' எனும் நாடகமும். பாலாவின் தலைமையில் குடும்ப முன்னேற்றத்துக்கு அடிப்படை தேசப்பற்றா குடும்பப்பற்றா எனும் பட்டிமன்றமும் இடம் பெற்றது. (இ

# தகதிகாண் அரசு அமைப்பது பற்றி 31ம் திகதி ஜனாதிபதி அறிவிப்பார்!

## ஜே.வி.பி பிரசார செயலர் தகவல்

[கொழும்பு]

ஒருவருட காலத்திற்கு தகுதிகாண் அரசு அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இம் மாதம் 31ம் திகதி வெள்ளிக்கிழமைக்குள் பதில் அளிப்பதாக நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போது தம்மிடம் தெரிவித்துள்ளாரென்று ஜே. வி.பி யின் பிரசார செயலர் விமல் வீரவன்ச நேற்று தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடனும், பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவுடனும் தகுதி காண் அரசு அமைப்பது தொடர்பாகநேற்றுமுன்திரமிரவுபலமணி நேர பேச்சில் ஜே.வி.பி தலைவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

ஜனாதிபதியுடனான இப் பேச்சுவார்த்தையின் பின்னர் அதுதொடர்பாக கருத்து வெளியிட்டஜே விபியின்பிரசார செயலர் விமல்வீரவன்ச மேலும் தெரிவிக்கையில் நாம் முன்வைத்த ஐந்து கோரிக்கைகளில் இருந்து ஒரு போதும் பின்வாங்கமாட்டோம்

ஜனாதிபதி சந்திரிகா எம்மிடம் தெரிவித்துள்ள வாறு 31ம் திகதிக்குள் எமக்கு பதில் அனுப்பா விட்டால் இனிமேல் ஒருபோதும்அரசாங்கத்துடன் பேசப்போவதில்லையென்றும் தெரிவித்துள்ளார். (வ)

### வீடியோ

பத்திரிகை ஒன்று நேற்று வெளியிட்டுள்ளது 115நிமிடங்கள் காண்பிக்கப்பட்ட இவ்வீடியோகாட்சி போதிய வெளிச்சம் இல்லாததாலும படப்பிடிப்பாளருக்கிருந்த அசௌகரியம் காரணமாகவும் தெளிவாக இல்லை,

ராஜ்பெர்னாண்டோ மைதானத்தில் இறங்கியது தொடக்கம் விசேட கொமாண்டோ பிரிவு வந்து தாக்குதல் தொடங்கும் வரையிலுள்ள நிகழ்வுகள் பதியப்பட்டுள்ளன. மைதானத்திலிருந்து படைத்தளத்தினுள் நுழைந்தது, சென்றிகடமையில் நின்றவர்களைச் சுட்டது, விமானங்கள் தாக்கப்பட்டது.விமான நிலையத்தினுள் ஓடுவது விமானங்கள் அழிவது கட்டுப்பாட்டுகோபுரத்தில் ஏறுவது, மற்றும் காலைவரை நடந்த நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இடையிடையே தமிழ்ப் பகுதிகளில் கிபிர் விமானங்கள் குண்டுவீசும் காட்சிகளும் பதியப்பட்டுள்ளது. (இ

### முகமாலை

தாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்துள்ளது.

சுமார் அரைமணிநேரம் வரை நீடித்த மோதலின் போது இராணுவத்தினர் முகாம்களிலிலிருந்து பலத்த எறிகணை த் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

முகமாலைப்பகுதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவநடவடிக்கையின் போது நேற்றுஅதிகாலை 5 மணிமுதல் உலங்குவானூர்திகள் யாழ்குடாவை தாழப் பறந்து நோட்டமிட்ட வண்ணம் இருந்தன.

இந்த இராணுவநடவடிக்கையின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் 2ம் லெப்டினன் காண்டீபன் (பாலகிருஷ்ணனா செந்தூரன் யாழ்ப்பாணம்) என்ற போராளிவீரமரணம் அடைந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். [வ]

## மெய்கண்டானில் உயர்தர வகுப்பு

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் க.பொ.த உயர்தர வகுப்புக்களை ஆரம்பிப்பதற்குவ.கி.ம கல்வி அமைச்சு அனுமதிவழங்கியுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைத்தலைவர் என்.திரிலோகநாதன்,அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டு எடுத்த நடவடிக்கையின்பயனாகவே இவ்வுயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## மரண அறிவித்தல்

அமரர்

### கார்த்திகேசு சிவனாதி

சாவல்கட்டில் வசித்த கார்த்திகேசு சிவனாதி கடந்த 25-08-2001 சனிக்கிழமை அன்று 101 வயதில் காலமானார்,

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற துரைராசா, காலஞ் சென்ற பாலசிங்கம், செல்லக்கண்டு, யோகம்மா சுப்பிரமணியம் கந்தையா, வீரசிங்கம், தங்கக்கண்டு மலர் ஆகியோரது தந்தையுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்
எஸ். கே. வசந்தன்
[பேரன்]

சாவல்கட்டு,
சண்டிலிப்பாய்.

(சி-2425]


காலத்தால் அழியாத, கற்பனைக்கு எட்டாத அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு



மகாநதி ஜுவல்லறி

உரிமையாளர்: S. K. S. மைந்தர்கள்

72A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-2306)


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.